விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 17 புதன்கிழமை (30.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

ரா ம் கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்'
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வட.-கிழக்கு நிர்வாகக் கட்டமைப்பில் படைத்தரப்பின் தலையீட்டால் சிக்கல்



## டாக்டர் ஜெகான் பெரேரா கருத்து

*(கொழும்பு)*, வடக்கு கிழக்கில் படைத் தரப்பினரின் அளவுக்கதிகமான பிரசன்னம் தொடர்ந்தும் காணப்படுவதால், இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியைச் சந்தித்து வருவதாக தேசிய சமாதானப் பேரவையின் இயக்குநர் டாக்டர் ஜெகான் பெரேரா , ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் இணையத் தளத்திற்கு (IRIN) தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் நிர்வாகக் கட்டமைப்புகளில் காணப்படும் படைத்தரப்பினரின் தலையீடுகள் மற்றும் பொதுமக்களின் அன்றாட வாழ்வில் காணப்படும் படைத்தரப்பினரின் தலையீடுகள் போன்ற காரணிகள் அப்பிரதேசங்களில் பிரச்சினையை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் புனர்வாழ்வு வழங்கப்பட்ட போராளிகள் மீண்டும் இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழலுக்குள் வாழவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவதால் *(19ஆம் பக்கம் பார்க்க)*

## பேச்சுவார்த்தையில் ஏமாற்றியது போலவே தெரிவுக்குழுவிலும் நாம் ஏமாற்றப்படுவோம்!

### அவுஸ். தூதுவரிடம் மாவை எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதோடு எத்தனை பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை உறவினர்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் திருமதி றொபின் மோடியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடியபோதே தாம் மேற்கண்டவாறு தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வலம்புரிக்கு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள்வாழும்பகுதியில்உள்ள நெருக்கடி நிலைகள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறியிருந்தோம்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் முகாம்களிலும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

ஆனால் இந்த அரசாங்கம் 6 ஆயிரம் பேர்தான் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டும் எனக் கூறி வருகின்றது. இடம்பெயர்ந்த மக்களை *(20ஆம் பக்கம் பார்க்க)*



அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திருமதி றொபின் மோடி, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம். *(படம்: என்.குமார்)*

## நவநீதம்பிள்ளை இங்கு வருவதாயின் உரிய நடைமுறையை பின்பற்ற வேண்டும்

### வெளிவிவகார அமைச்சின் செயலர் தகவல்

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமாயின், அது தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம, வெளிவிவகார அமைச்சின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பயண நிகழ்ச்சிநிரலை தயாரித்த பின்னரே நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்ய முடியும் எனக் கூறியுள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் வெளிவரும் தகவல்கள் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. மனித *(19ஆம் பக்கம் பார்க்க)*

## சரத்தை விடுதலை செய்த அரசு அரசியல் கைதிகளை விடுவிக்காதது ஏன்?

### கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் கேள்வி

சிறைச்சாலைகளில் விசாரணை இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜே.வி.பியினர் மேற்கொண்ட கிளர்ச்சியை அடுத்து கைது செய்யப்பட்டு பொது மன்னிப்பின் மூலம் சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்ததுபோல இவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

கொழும்பு வெலிகட சிறைச்சாலைக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

தமிழ், சிங்கள அரசியல் கட்சிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களும் மற்றும் காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## சிறுவன் ரஜிராம் கடத்தல் சம்பவம் சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டி சிறுவன் கடத்தல் வழக்கின் இரு பிரதான சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டி சங்கானையைச் சேர்ந்த பரமநாதன் ரஜிராம் (வயது13) என்ற சிறுவன் முஸ்லிம் நபர்களால் கடத்தப்பட்டு முஸ்லிமாக மாற்றப்பட்ட நிலையில் ஒரு வருடத்தின் பின்னர் மீட்கப்பட்டான்.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்ற நீதவான் கே. ஜீவராணி முன்னிலையில் நடைபெற்று வரும் நிலையில் பிரதான சந்தேக நபர் கடந்த வியாழக்கிழமை பொலிஸாரிடம் சரணடைந்த நிலையில் குறித்த வழக்கு மீண்டும் நேற்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி பார்த்தீபன், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களினையும் பிணையில் விடுவிக்கக் கோரி பிணை விண்ணப்பம் செய்திருந்ததோடு,

குறித்த சிறுவன் கடத்தப்படவில்லை என்றும் யாழ். பேருந்து நிலையத்தில் மூன்று நாட்களாக அநாதரவான நிலையில் சாப்பாடு இன்றி அலைந்த வேளையிலேயே சர்பர்த் கடை *(19ஆம் பக்கம் பார்க்க)*

## கார் மோதி மாணவன் பலி



(பூந்தோட்டம்)

வவுனியா கொரப்பத்தானை வீதியில் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் இடம்பெற்ற வாகன *(19ஆம் பக்கம் பார்க்க)*

## உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள்

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகவுள்ளதோடு, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 26-ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.(ந)

## கோம்பாவிலில் வெடிப்பு

இராணுவத்தினரால் மீள்குடியேற்றத்திற்கென அனுமதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு *(19ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புளொட்டின் ஏழாவது தேசிய மாநாட்டில் கூட்டமைப்பை பலப்படுத்துவது எனத் தீர்மானம்

(வவுனியா)

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)யின் ஏழாவது தேசிய மாநாடு கடந்த 27,28ஆம் திகதிகளில் வவுனியாவில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 118 பேராளர்கள் கலந்து கொண்டார்கள்.

மாநாடு கட்சியின் உபதலைவர் பெ.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிக்கு 29 பேர்களைக் கொண்ட புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைவராகவும், சிவபிரமணியம் சதானந்தம் செயலாளராகவும், கந்தையா சிவநேசன் பொருளாளராகவும் பேராளர்களால் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

பின்னர் இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக விரிவாகவும், ஆழமாகவும் விவாதிக்கப்பட்டது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை சிதைந்துவிடாது அதனைப் பலப்படுத்துவதுடன் ஒத்த கருத்துள்ள ஏனைய தமிழ் கட்சிகளையும் உள்வாங்கி தமிழ் மக்கள் ஓரணியில் நின்று உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என பேராளர்கள் வலியுறுத்தினார்கள்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றில், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) கட்சி புதிய அக-புற அரசியல் நிலைமைகளை கருத்தில் கொண்டு பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

இலங்கைத் தீவில் புரையோடிப்போயுள்ள, கடந்த 60 வருடங்களாக பல்வேறு அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் காரணமாக அமைந்த அரசியல் முரண்பாட்டுக்கான தீர்வு அணுகுமுறையில், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி பின்வரும் விடயங்களில் உறுதி பூணுகிறது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் வகையில், தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தக் கூடியவாறு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான, நியாயமான நிரந்தரத் தீர்வொன்றை எட்டும் பொருட்டு தொடர்ந்தும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயற்சித்து இலக்கை அடைதல்.

போருக்குப் பின்னரான புதிய அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டு அரசியல் கூட்டு முன்னணி ஒன்றுக்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்தல் இன்றைய சூழலில் அத்தகையதொரு கூட்டு முன்னணியான தமிழ்த்தேசிய கூட்டமைப்பினை பலப்படுத்தும் நோக்கில், தமிழ் மக்களின் நலன் சார்ந்து இயங்கிவரும் அனைத்து தமிழ்க் கட்சிகளையும்ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுதல்.

போருக்குப் பின்னரான புதிய பூகோள அரசியல் சூழலில், சர்வதேசத்தின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பியிருக்கும் நிலைமையை சாதகமாகக் கொண்டு, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை பெறுவதற்காக முயற்சித்தல்.

தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாக்க முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளுதல். அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பை வழங்கி அவர்களை விடுதலை செய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

அனைத்து இயக்கங்களின் முன்னாள் போராளிகளும், மீண்டும் சமூகத்துடன் ஒன்றித்து வாழக்கூடிய வகையில், அவர்களது சமூக, பொருளாதார வாழ்வை வளப்படுத்துவதற்கான உதவிகளை அரசிடம் இருந்தும், புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்தும் பெறுவதற்கு முயற்சித்தல்.

மீள்குடியேறிய மக்களினதும், மீள்குடியேறக்காத்திருக்கும் முகாம்களில் வாழ்ந்து வரும்மக்களினதும்வாழ்வாதாரநிலைமையை விருத்தி செய்யவும், அவர்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் இயலுமான அனைத்து வழிகளிலும் முயற்சித்தல்,

போரில் காயமுற்று அங்கவீனம் அடைந்த அனைவருக்கும் (பொதுமக்கள், போராளிகள்) தேவைப்படும் அத்தியாவசிய வசதிகளையும், பூரண மருத்துவ உதவிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு பாடுபடுதல்.

வட-கிழக்கின் முக்கிய பொருளாதார வலங்களான விவசாயம், மீன்பிடி என்பவற்றை நவீனமயப்படுத்துவதுடன் கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

வட-கிழக்கில் குறிப்பாக யுத்தத்தால் பாதிப்புற்ற பிரதேசங்களில் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளையும், வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்காக பாடுபடுதல்,

யுத்தத்தில் கணவனையிழந்த விதவைப் பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் பொருட்டு சாத்தியமான அனைத்து வழிகளிலும் உழைத்தல்.

இலங்கையிலிருக்கும் சகல சமூகங்களினதும் மனிதவுரிமைகளையும், சமூக நீதியையும் பேணுவதற்காக உழைப்பதுடன், சமூக, வர்க்க, பால் ரீதியான ஏற்றத்தாழ்வுகளை இல்லாது ஒழிப்பதற்காக தனித்தும், இலங்கையின் அனைத்து முற்போக்கு அரசியல் மற்றும் சமூக சக்திகளுடனும் இணைந்து பாடுபடுதல்.

சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கும், மனித உரிமைகள் மற்றும் சமூக நீதிக்கான அனைத்து போராட்டங்களுக்கும் சாத்தியமான வகைகளில் ஆதரவளித்தல் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (ந-8,11)

## புறாப் பிடிக்கச் சென்ற சிறுவர் பொலிஸில்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேர்முட்டிக்குள் சந்தேகத்திற்கிடமாக மறைந்திருந்த மூவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஆலயத்தில் முன்னால் உள்ள தேர்முட்டிக்குள் சுமார் 15 வயது மதிக்கத்தக்க மூன்று சிறுவர்கள் மறைந்திருந்ததை அப்பகுதி மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் அவதானித்துள்ளனர்.

இதன்போது அவர்களில் இருவர் தப்பியோட முற்பட்ட வேளை அவ்விருவரையும் அப்பகுதிமக்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.

தாம் புறா பிடிக்கவே தேர்முட்டிக்குள் மறைந்திருந்ததாக பிடிபட்ட சிறுவர்கள் மூவரும் பொலிஸாரிடம் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக ஆலய நிருவாகத்தினரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டுள்ளது. (ந-246)

## காதல் வலையில் மாணவர்கள் கட்டுப்படுத்த அதிபர் நடவடிக்கை

### உரிமை மீறல் என பெற்றோர் கொதிப்பு

(பூந்தோட்டம்)

மாணவர்களிடையேகாதல்விவகாரம்காணப்படுவதாகத் தெரிவித்து வவுனியா கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் சிலரை கடந்த வாரம் பாடசாலையில் இருந்து இடைவிலத்தியது தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவிடம் மாணவர்களின் பெற்றோர் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளிடேயே காதல் விவகாரம் காணப்படுவதாகத் தெரிவித்து சுமார் 10 மாணவர்களை தற்காலிகமாக இடைவிலத்தியதுடன் ஒரு மாணவனை தொடர்ந்து கல்வி கற்பதற்கு அனுமதி மறுத்து அவருடைய பாடசாலை விடுகைப் பத்திரம் மற்றும் அம் மாணவனின் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்று அறிக்கை என்பவற்றில் அபகீர்த்தி ஏற்படுத்தும்வகையில்அதிர்சிவப்புமையினால்எழுதி பாடசாலையில் கற்பதற்குத் தடையும் விதித்தார்.

ஏனைய மாணவர்கள் ஒருமாதம் மற்றும் மூன்று மாதங்களுக்கு பாடசாலைக்கு சமூகமளிக்கவும் பாடசாலை அதிபரினால் தடை விதிக்கப்பட்டதுடன் அதனை தெளிவுபடுத்தி கடிதம் மூலம் அறிவித்தலும் விடுத்துள்ளார்.

இதன்காரணமாக சிறுவர்களின் உரிமையை மீறுவதற்கு அதிபருக்கு அதிகாரம் இல்லை எனவும் பாடசாலையில் கல்வி பயிலும் வயதுள்ள மாணவனை பாடசாலையில் கல்வி கற்பதற்கு நிரந்தர் தடை விதிப்பதற்கு அதிபருக்கு அதிகாரம் உள்ளதா எனவும் கேள்வி எழுப்பிய நிலையில் பாதிப்படைந்த மாணவர்களின் பெற்றோர் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிப்படைந்த மாணவர்களுடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினரும் வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குச் சென்றிருந்தனர்.

இவ் விடயம் தொடர்பில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவிடம் கேட்டபோது, மேற்படி விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர் தமக்கு முறையிட்டிருந்ததாகவும் தற்போது மாணவர்கள் தரப்பிலும் தம்மிடம் முறையிட்டுள்ளதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் மாணவர்களின் கல்வி பாதிப்படையாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ந-9,266)

## நிறுவனத் தலைவர்களிற்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிறுவன தலைவர்களிற்கான ஜூன் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது என யாழ்.சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக்குழுக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-7)

## வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றிய நபர் கைதானார்

(பூந்தோட்டம்)

மட்டக்களப்பு மற்றும் நுவரேலியா பிரதேசத்தை சேர்ந்த இரு சிறுமிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி ஏமாற்றிய வர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர் வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தெரிய வருவதாவது,

19 வயது மற்றும் 17 வயது இரு சிறுமிகளை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறிய ஆணொருவர் போலியான பிறப்புப் பத்திரம் மற்றும் கடவுச்சீட்டு என்ப வற்றை தயார் செய்து வவுனியா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிய கத்தின் பயிற்சி நிலையத்தில் இணைத் துள்ளார். கடந்த ஒரு மாதமாக அங்கு பயிற்சி பெற்ற அவர்களிடம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பயிற்சி நிறைவின் போது பதிவு செய்வதற்காக அடையாள அட்டைகளை பயிற்சி நிலைய பொறுப்பதிகாரிகள் கேட்டபோது அவை தம்மிடம் இல்லை எனக் கூறியிருந்தனர்.

இந்நிலையில் அவர்களை பயிற் சிக்கு இணைத்து விட்டவரும் அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த சமயம் பொறுப்பதிகாரிகள் சந்தேகம் கொண்டு வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து சிறுமிகளை அழைத்து வந்தவர் கைது செய்யப்பட்டதுடன் சிறுமிகள் இருவரும் வவுனியா சிறுவர் நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிறுவர் நன்னடத்தை பிரிவினர் சிறுமிகள் மீது மேற்கொண்ட விசாரணையில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தம்மை அழைத்து வந்து ஒரு நாள் வவு னியா நகரில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைத்ததாகவும் அப்போது தம்மை அழைத்து வந்தவர் தவறான முறையில் நடக்க முற்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் தொடர் பாக சிறுவர் நன்னடத்தை பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-9,266)

## அமெரிக்க விசா முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் தற்போது அவர்களின் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

இதற்கு விண்ணப்பித்தவர்கள் தாங்கள் அதற்குத் தெரிவாகியுள்ளனரா? இல்லையா? என்பதை, அவர்களுக்கு வழங்கப்பட்ட பதிவு இலக்கம் விபரங்களை செலுத்தி அறிந்து கொள்ளலாம்.

தெரிவானவர்கள் தங்களுக்குரிய விசா அனுமதிக் கடிதத்தினையும் அதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். முன்னர் போல வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் இனிமேல் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது. இதற்குரிய இணையத்தள முகவரி kccdv@state.gov. (ந-8,11)





**வேலை வாய்ப்பு**

இலங்கையில் அதிகளவில் வேலை வாய்ப்பளித்த சர்வதேச நிறுவனமான Optimo தன் கிளையை யாழ் நகரிலும் இயக்கி வருகின்றது. ஆறுமாத கால முகாமைத்துவ பயிற்சி உடன் ஆரம்பித்து மாதாந்தம் ரூ. 35000/- சம்பளத்தை ஈட்டும் இவ்வேலைவாய்ப்பை பெற விரும்புவோர் அழைக்க வேண்டிய

**இலக்கம்:- 0772-151014**

குறிப்பு: சாதாரண கல்வித் தகைமை போதுமானது.
வயதெல்லை 18 - 28 இற்குள் இருத்தல் வேண்டும்.
இருபாலாருக்கும் தங்குமிட வசதி செய்து தரப்படும்.
(8532)


## சந்தேக நபர்கள் நால்வருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இரவுவேளையில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய நால்வருக்கு யாழ் நீதிமன்று விளக்கமறியல் விதித்துள்ளது. கோப்பாயில் கடந்த 25ஆம் திகதியன்று இரவுவேளையில் சந்தேகத்திற்கிடமாக நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு மீண்டும் நேற்று யாழ் நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நால்வரும் ஏற்கெனவே சிறு சிறு குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தமையால் எதிர் வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-4)

## இன்று ஒரு தகவல்

# அன்புக்கு எல்லை இல்லை

ஓர் ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அந்த ஊருக்கு வெளியில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் ஓர் ஆச்சிரமம் ஒன்றை க்கட்டி அதிலே அவர் வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் நடு இரவில் அவ்வாச்சிரமத்தில் அவர் தூங்கி கொண்டிருந்த போது யாரோ கதவை தட்டும் சத்தம் அவர் காதினில் ஒலித்தது.

உடனே அவர் எழுந்து சென்று கதவை திறந்து பார்த்தார். ஓர் இளைஞன் அவர் முன்னால் நின்று கொண்டிருந்தான். அவ னது முகத்தை பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

"தம்பி... யார் நீ?... என்ன வேண்டும் உனக்கு... எப்படி இந்த நேரத்தில் இங்கே வந்தாய்?" என்று கேட்டார்.

" சுவாமி ... நான் ஒரு வழிப்போக்கன்... இந்த வழியாக வந்து கொண்டிருந்த வேளையில் இருட்டிப் போய்விட்டது. நான் ஊருக்கு புதியவன் . அது தான் எங்கே போகிறது என்று தெரியா மல் இங்கே நுழைந்தேன். இன்றிரவு மட்டும் தங்குவதற்கு இடம் தந்தால் பேருபகாரமாக இருக்கும். இந்த இரவு வேளையில் ஆச்சிரமம் தான் என் கண்ணுக்கு தென்பட்டது. அதனால் தான் கதவை தட்டினேன். உங்களுக்கு தொந்தரவு கொடுத்து விட் டேன். என்னை மன்னித்து கொள்ளுங்கள் என்றான்."

அவர் இவன் முகத்தைபார்த்தார். பாவமாக இருந்தது. " தம்பி! நீ வேறு எங்கேயும் போக வேண்டாம். இங்கே இன்றிரவை கழித்துக் கொள்ளலாம்" என்றார்.

"ஆம்"!என்று அவன் தலையசைத்தான். உடனே அந்த நேரத்தில் அவரால் முடிந்தளவு ஏதோ உணவு தயாரித்து அவ னது பசியை நீக்கினார்.

அதன் பின்னர் அவனுக்கு படுக்க வசதி செய்து கொடுத்தார். அவன் நிம்மதியாக தூங்கினான்.

காலையில் எழுந்தவுடன் மறுபடியும் அவனுக்கு உணவு தயா ரித்து கொடுத்தார். அவன் அதை சாப்பிட்டுவிட்டு புறப்பட் டான்.

அவ்வேளையில் அவர் கேட்டார் " தம்பி நீ எந்த ஊர்? எதற்காக இந்தப்பக்கம் வந்தாய்? என்ன தொழில் செய்கி றாய்?" என்று அடிமேல் அடி கேள்வி எழுப்பினார்.

" சுவாமி ... நீங்கள் மிகவும் நல்லவர்.உங்களிடம் பொய் கூறுவது பிழை" என்றான்.

" சரி ... சொல்லு!" என்றார். அந்தப்பெரியவர்.

"நான் ஒரு திருடன் ... நேற்று இரவு அயல் கிராமத்திலுள்ள வீடொன்றினுள் நுழைந்து திருடிவிட்டு இந்த வழியாக வந்தேன். வரும் வழியில் சில காவலர்கள் என்னை துரத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பிக்கொள்வதற்காகவே இந்த ஆச்சி ரமத்தினுள் நுழைந்தேன்.. ஐயா!

என்னை மன்னித்து கொள்ளுங்கள்... இப்படிச் சொல்லி விட்டு அவன் சென்று விட்டான். இதைக் கேட்ட பெரியவர் திகைத்து போனார்.

"எவ்வளவு பெரிய பாவம் செய்திருக்கிறோம்... இந்த ஆச்சி ரமம் எவ்வளவு புனிதமான இடம். இதில் ஒரு திருடன் தங்கி விட்டு போயிருக்கிறான். அதற்கு நான் காரணமாகி இருக் கிறேன். இந்தப் பாவத்தை எங்கே போய் கழுவ முடியும்"என்றார். இப்படி எண்ணி எண்ணி அவர் மிகவும் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

உடனே இறைவன் சந்நிதி முன் சென்றார்.

"கடவுளே ! ஒரு திருடனுக்கு போய் அடைக்கலம் கொடுத்து விட்டேன். அது மட்டுமல்ல... உணவளித்துள்ளேன். இப்படிப்ப ட்ட ஒருநிலைக்கு என்னை ஆளாக்கி விட்டாயே. இந்தப்பாவத்தை நான் எந்த புனித நதியில் போய் கழுவுவேன்" என்று மனம் வருந்தினார்.

இறைவனிடமிருந்து உடனே அவருக்கு பதில் கிடைத்தது.

"இதோ பார்! அந்த திருடனை ஒரு நாள் உன்னோடு ஆச்சிரமத் தில் தங்க வைத்து இரண்டு வேளை உணவளித்ததற்கு இப்படி புலம்புகிறாய். அவனுக்கு முப்பது வயதாகிறது. முப்பது வருடங் களாக அவனை நான் இந்தப் பூமியிலேயே வாழ வைத்து மூன்று வேளையும் உணவும் கொடுத்து பராமரித்து காப்பாற்றி வந்திருக்கிறேன். இந்தப் பாவத்தை எங்கே போய் கழுவுவது?" என்றார்.

இறைவனின் இந்த வார்த்தைகள் அவரது காதினுள் விழு ந்ததும் அவருக்கு விழிப்பணர்வு கிடைத்தது!

அன்புக்கும் கருணைக்கும் எல்லையே இல்லை என்பதை அவர் புரிந்து விட்டார். *தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை

(கொழும்பு)

கத்தோலிக்க மறைப் பாட சாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம் பெறவுள்ளது.

இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடை பெறவுள்ளது. இப் பரீட்சைக்கு விண் ணப்பிப்போர் மறைப்பாடசாலை யொன்றின் பத்தாம் தரத்தில் சித் திபெற்று இறுதி நற்சான்றுப் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின் றிருத்தல் அல்லது தேசிய பொதுக் கல்வி நற்சான்றுப் பத்திர வகுப்பில் கத்தோலிக்க மறைப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக் கல்வி ப்ரீட்சையில் பதினொராந்தர வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண் டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி கள் மறைப் பாடசாலை விண்ணப்ப தாரராக மட்டுமே இருத்தல் வேண்டும்.

அத்துடன் அங்கு குருவானவர் அல்லது மறைக் கல்விப் பாடசா லைப் பொறுப்பாசிரியர் உறுதிப்ப டுத்துதல் வேண்டும்.

கத்தோலிக்க மறைப் பாட சாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை க்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் உரிய காலத்தில் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரர் தமது வதிவி டத்துக்கு அண்மையிலுள்ள மறைப் பாடசாலையினூடாக பரீட்சைக் கட்டணமாக 150 ரூபாவை செலுத்தி பரீட்சைக்கு விண் ணப்பிக்கலாம்.

இவ் விண்ணப்பங் களில் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையா ளருக்கு பரீட்சை ஆணை யாளர் நாயகம், இல ங்கை பரீட்சைத் திணை க்களம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்ர முல்லை என்னும் முக வரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இத்தேர்வு வினாத் தாள்கள் நான்கு பிரிவு களாக இடம்பெறும். ஒரே தடவையில் நான்கு வினா த்தாள்களிலும் சித்திபெறு தல் வேண்டும்.

பரீட்சைப் பெறுபேறு கள் மறைப்பாடசாலை பொறுப்பாசிரியருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் எம்.என். ஜே. புஷ்பகுமார அறிவித்துள்ளார். (அ-7)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிர மணியசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறுகின்றது.

எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 4 ஆம் திகதி திங்கட்கி ழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெற வுள்ளதாக ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 50 |
| உருளைக்கிழங்கு | 80-90 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 100 |
| தக்காளி | 170 | 90 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 70 | 80 |
| கரட் | 60 | 55 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 45 | 80 |
| வாழைக்காய் | 20 | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 90-120 | 90 | 70-120 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 70 | -- | 80 |
| பயற்றங்காய் | 160 | 100 | 80 |
| லீக்ஸ் | 160 | 110 | 160 |
| பீற்றூட் | 70 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 |
| போஞ்சி | 120 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 70 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 20-30 | 15-20 |

# இராசி பலன்

*30.05.2012*
*(வைகாசி 17, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு*
*நவமி காலை 7.02 மணிவரை*
*தசமி பின்னிரவு 5.06 மணிவரை*
*உத்தரம் முன்னிரவு 7.07 மணிவரை*
*இராகுகாலம் 11.52-1.22 மணிவரை*
*சுபநேரம் 4.22-5.52 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், தொழிலில் இடையூறாக இருந்த வர்கள் விலகுவர், புதிய நண்பர்க ளின் அறிமுகம் கிடைக்கும் , உடல் நலம் சீராகும், சுவாரஸ்யமான நாள்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடு ப்பீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், தன வரவு திருப்திகரமாக அமையும்.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பெற்றோர் வழியில் எதிர் பார்த்த தகவல் வந்து சேரும், வாகன சுகமுண்டு, பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை பெறலாம், தொழில் முன்னேற தொல்லை தந்தவர்களே உதவ முன்வருவர், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக் கலாம்.

**சிங்கம்** பொருளாதார வளர்ச்சி மேலோங்கும் நாள், சுற்றத்தார் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பர பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வார்த்தைகளால் பிறரை கவர்வீர்கள்.

**கன்னி** வேலைச்சுமை குறைவடையும் மாலையில் திடீர் பயணங்கள் ஏற்படலாம், சுபவிரயம் ஏற்படும் நாள், ஆரோக்கியம் சம்பந் தப்ப ட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அக லும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**துலாம்** தொழிலில் புதிய மாற்றங்களை செய் யும் எண்ணம் உருவாகும், குடும்ப உறு ப்பினர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது,பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்

**விருச்சிகம்** வீட்டுக்கு தேவையான பொருட் களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் பகை அகலும், கலகலப்பான நாள், மதி ப்பும் மரியாதையும் உயர்வடையும், தொழில் முன்னேற்றமுண்டு.


**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினர் களின் பாராட்டுக்களை பெறுவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், ஆரோ க்கியமான நாள் , போசன சுகமுண்டு.

**மகரம்** தொழிலை விரிவுபடுத்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தேக நலனில் தெளிவு பிறக்கும், பூர்வீக சொத்துக்க ளால் நன்மையுண்டு, தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**கும்பம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாப ங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவ னம் தேவை, போசணசுகம் உண்டு, காரிய ங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** கௌரவமான நாள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், எடுத்த முயற்சி வெற்றி தரும், கனவு பலித முண்டு, போசண நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும், ஆரோக் கியமான நாள்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு 15

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களத்திலிருந்து பலாலிவீதி வழியாக அழைத்துச் செல்லப்பட்ட ‘அரசு’ என்ற காளை மாட்டை ஏராள மானோர் நின்று வேடிக்கை பார்த்தனர்.

மாட்டு உருவத்தில் ஒரு யானை வருவதாக அவர்கள் பேசிக் கொண்டதில் அதிசயம் இல்லை.

யானையின் உருவத்தில் காளை மாடு அழைத்து வரப்படுவதை பார்த்தவர்களில் பலருக்கு அந்தக் காளைமாட்டின் சரிதம் தெரிந்திருக்க நியாயம் இல்லை.

எதுவாயினும் ஜெனீவாவில் நடந்த மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்ற 22.03.2012 அன்று தான் காளை மட்டின் ஏல விற்பனையும் இடம்பெற்றதென்பதை நினைக்கும் போது,

தமிழர்களுக்கும் காளை மாட்டிற்கும் அன்றையநாள் ஒரு நல்ல நாளாகவே இருந்தது என்று தான் கூறவேண்டும். இதிலிருந்து எங்களுக்கும் காளை மாட்டிற்குமான பூர்வீகத் தொடர்பு பற்றி சிந்திக்காமல் இருக்கமுடியாது.

**காளை மாட்டு இறைச்சிக்காக செய்யப்பட்ட விளம்பரம்**

22 ஆம் திகதி மார்ச் மாதம் 2012 வியாழக்கிழமை அன்று ஏலவிற்பனைமூலம் கொள்வனவு செய்யப்பட்ட காளை மாட்டை 25 மார்ச் 2012 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைச்சிக்கு வெட்டுவதென அதனைக் கொள்வனவு செய்தவர் தீர்மானிக்கின்றார்.

அதன்பொருட்டு பல்வேறு இடங்களில் அந்தக்காளைமாடு காட்சிப்படுத்தப்படுகின்றது. கூடவே துண்டுப்பிரசுரமும் வழங்கப்படுகின்றது.

ஐரோப்பிய நல்லினக்காளை மாட்டு இறைச்சி ஞாயிற்றுக்கிழமை விற்பனை செய்யப்படும் என்ற தகவல் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் வெளிப்படுத்தப் பட்டிருந்தது.

இறைச்சிக்காக வெட்டப் படவுள்ள காளைமாட்டைப் பார்த்தவர்கள் இஃது என்னே! கொடுமை.

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் காளைமாட்டைக் காட்சிப்படுத்தி- மாட்டிறைச்சி விற்பனைக்கு விளம்பரம் செய்து - துண்டுப் பிரசுரம் வெளியிட்டு மாட்டைக் கொல்வதா என்று புண்பட்டுக் கொண்டனர்.

இன்னும் சிலர் இந்து அமைப்புக்கள் என்னதான் செய்கின்றன என்று கேள்வியும் எழுப்பினர்.

காளைமாட்டைப் பார்த்த சிறுவன் ஒருவன் அந்தக் காளை மாடு இறைச்சிக்காக வெட்டப்படப் போகின்றது என்பதை அறிந்து ‘ஓ ’என்று அழுதுவிட்டான் .

**தொலைபேசிஅழைப்பு**

23 ஆம் திகதி பகல் முழுவதும் காளைமாட்டு காட்சி நடக்கின்றது. காளைமாட்டு இறைச்சி தொடர்பில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் விரிவுரையாளராக இருந்த ஜனகேஸ்வரனின் கைக்குக் கிடைத்தது.

அவர் அந்தத் துண்டுப்பிரசுரத்தை வலம்புரியின் பிரதம ஆசிரியருக்கு அனுப்பி வைக்கின்றார். 24 ஆம் திகதிக்கான ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்ட பின்னர்,

தனது கோவையில் இருக்கக் கூடிய முக்கிய செய்திகளை வலம்புரி ஆசிரியர் பார்வையிட்டபோது மாட்டிறைச்சிக்கான துண்டுப் பிரசுரம் தென்படுகின்றது.

மாடு வெட்டப்படுவதை எதிர்த்து சுவாமி ஞானப்பிரகாசர் நாட்டைவிட்டு வெளியேறிய மண்ணில் இப்படியுமா? என்று நினைத்தவேளை, கையடக்கத் தொலைபேசியில் அழைப்பு.

அந்த அழைப்பை சிரேஷ்ட ஊடகவியலாளர். ந. வித்தியாதரன் எடுத்திருந்தார். காளைமாட்டைக் காட்சிப்படுத்தி இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பது அவரின் கோரிக்கையாக இருந்தது.

கோவையில் இருந்த துண்டுப்பிரசுரம் மற்றும் வித்தியாதரனின் தொலைபேசி அழைப்பு என்பவற்றினால் 24 ஆம் திகதி வெளிவருவதற்காக கொடுக்கப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தை நிறுத்திவைக்க முடிவு செய்யப்படுகின்றது.

அப்போது நேரம் இரவு 9.30 மணி. காளை மாட்டைக் காப்பாற்றுவதற்கான ஆசிரியர் தலையங்கம் எழுதப்படுகின்றது.(வளரும்)

**விதுரன்**

யாழ்.பண்ணைப்பகுதியில்....



## யாழ்ப்பாண வரலாற்றில் முதல் முறையாக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

ஐரோப்பா இனத்தைச் சேர்ந்த பல இலட்சம் பெறுமதியான ஆண் காளைமாட்டை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 25.03.2012 ஆம் திகதி அன்று நாவாந்துறை சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல.01, இல.02 இலக்கக் கடைகளில் இம் மாட்டிறைச்சி விற்பனையாக உள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாண வரலாற்றில் 60 வருடங்களுக்குள் அரசாங்க பண்ணைகளில் இம்மாடு மிக பெரிய இனமாகக் கருதப்படுகிறது. இதன் எடை சுமார் 2500 இறாத்தல் ஆகும். அரசாங்க சுகாதார அதிகாரியின் பரிசோதனையின் பின் இறைச்சிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மாட்டை பார்வையிட விரும்புவோர்கள் 24.03.2012 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணி வரை பண்ணை மீன் சந்தை முன்பாக பார்வையிடலாம் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்

(இது துண்டுப்பிரசுரம்) உரிமையாளர் S.M. சர்ஜுன்

**அன்பர்களே!**

நகுலேஸ்வரத்தில் பராமரிக்கப்பட்டுவரும் காளை மாட்டிற்கு நாளாந்தம் 20 கிலோகிராம் புல் தேவையாக உள்ளது.

இதனை அன்பளிப்பாகவோ அல்லது விலைக்கோதர விரும்புவோர் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்:-

0777866527

# இராஜதந்திர பதவிகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

## தமரா குணநாயகம் தெரிவிப்பு



அரசாங்கத்தின் இராஜதந்திர பதவிகளை தாம் மேலும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு பதவி விலக்கப்பட்ட தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவு கொள்கையில் உள்ள குளறுபடிகள் தம்மை இந்த தீர்மானத்தை மேற்கொள்ள செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏசியன் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே தமிழ் இராஜதந்திரிகள் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் தம்மை பதவி விலக்கியது அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வன்னிப்பகுதியில் பசுப்பாலுக்கு தட்டுப்பாடு

## கறவை மாட்டை எதிர்பார்க்கும் மக்கள்

(மல்லாவி)

வன்னிப்பகுதியில் கறவைப்பசுக்கள் இன்மையால் முன்பள்ளிச்சிறார்களுக்கு அரசின் உதவித்திட்டம் மூலம் தினசரி ஒரு குவளைப்பால் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் யுத்தத்திற்கு முன்னர் பால் உற்பத்தி ஓரளவு நடைபெற்று வந்தது. இடப்பெயர்வின் போது மக்கள் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது பெருமளவு கால் நடைகளை உணவாக்கினர்.மீதி கைவிடப்பட்ட நிலையில் செல் வீச்சுக்களில் காயமடைந்து அழிந்து போயின.

மீள்குடியேற்றத்தின் பின் குறைந்தளவு கால் நடைகள் மக்களால் பிடிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் போதியளவு பால் உற்பத்தி செய்யமுடியாதுள்ளது.

முன்பள்ளி சிறார்களுக்கு தினசரி ஒரு குவளை பால் வழங்க வேண்டியுள்ள போதும் பால் கிடைக்காமையின் காரணமாக பல முன்பள்ளிகள் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இத்திட்டத்திற்காக வந்த பெருமளவு நிதி அரச திறைசேரிக்கே மீண்டும் திரும்பி அனுப்பப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு நல்லின மாடுகளை கடன் அடிப்படையில் வழங்குவதன் மூலம் தமது குடும்ப வருமானத்தை உயர்த்தவும் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் இது உதவும் என மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



ஐந்தாம் திருவிழா (30.05.2012)

வீதி வலம் வந்து அருள் கொடுப்பாய்

இணுவைப் பதிதனிலே உறைபவனே
இன்பமோடு வாழ்வுதரும் இறையவனே
தேவர்சிறை மீட்டு வந்த வேலவனே
எங்கள் குறை தீர்த்திடும் நற் காவலனே!

அழகுக் கந்தனாய் நீ அடியவர்க்கு
சங்காரம் செய்பவனாய் கொடியவர்க்கு
சக்திதரும் வேல்கைத் தடியுனக்கு
பக்தி செய்யும் பக்தரில் பிடிப்புனக்கு

சிங்கார வேலவனே சண்முகனே
ஓம்கார நாயகனே இணுவைநாதா
வேண்டிக் கரமெடுத்தோமுன் பதியினிலே
வீதியுலாவந்து நம்குறை தீர்ப்பாய்!

கொக்குவில் கலைநேசன்

(சி-081)

5ஆம் திருவிழா உபயகாரர்


# கடத்தப்பட்டவர் கண்டுபிடிக்கப்பட்டார்

இனந்தெரியாத குழுவினரால் கடந்த 20 ஆம் திகதி கடத்தப்பட்டிருந் புளத்சிங்கள பிரதேச சபை உறுப்பினரான அனுபமா லக்மினி பண்டிதரட்ன (வயது- 29) இரத்தின புரி பிரதேசத்தில் வைத்து நேற்றைய தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்று தெபுவனா பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னைக்கடத்தி சென்ற நபர் இரத்தின புரி பிரதேசத்தில் விட்டுச் சென்றதாக பிரதேச சபை உறுப்பினரான அனுபமா தெரிவித்த தாக பொலிஸார் கூறியுள்ளனர்.

வரக்காகொட தெபுவான பகுதியில் வைத்து வாகனமொன்றில் வந்த இனந் தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டிருந்தார். இவர் கடத்தப்பட்டதற்கான காரணம் இது வரையில் கண்டறியப்படவில்லை என பொலிஸார் மேலும் கூறினர். (அ-2)

# மண்மேடு இடிந்து விழுந்து ஒருவர் பலி

எல்ல பொலிஸ் பிரிவிலுள்ள தெமோதர வெவலின்ன தோட்டத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை சரளை மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது மண்மேடு இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் சம்பவ இடத்தில் பலியானதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வெவலின்ன தோட்டத்தைச்சேர்ந்த எம். நடராஜா (வயது-54) என்பவரே பலியானவர் ஆவார். இதில் காயமடைந்தவர் பதுளை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள அதே வேளை பலியானவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-9)

# கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு

(கொழும்பு)

உலகத் தமிழ் இலக்கிய மாநாடு கொழும்பு தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜூன் 2,3,4 ஆம் திகதிகளில் கொழும்புத் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதனின் தலைமையில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் இலக்கியப் பணிச் செயலாளர் தி.ஞானசேகரன் அறிவித்துள்ளார்.

இவ் இலக்கிய மாநாட்டின் முன்னோடி நிகழ்வாக தமிழ்ச்சங்கமும் சென்னை பாரதியார் சங்கமும் இணைந்து நடத்தும் பாரதியார் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முழுநாள் விழாவாக இடம்பெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை ஆரம்பமாகும் இலக்கிய மாநாடு தமிழ் இலக்கியமும் சமூகமும் இன்றும் நாளையும் என்னும் தொனிப் பொருளில் 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் தொடக்க நாள் நிகழ்வுகள் காலை 8 மணி முதல் மாலை 4.45 மணி வரை நடைபெறவுள்ளது. இதன்போது காலை 9.30 மணி வரை பேராளர் பதிவுகள் இடம்பெறும்.

விழா அங்குரார்ப்பண நிகழ்வை பாலசுப்பிரமணியம் தம்பதியினர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர். மாநாட்டு சிறப்பு மலர் வெளியீட்டுரையை பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்தவுள்ளார். முதற்பிரதியை பொறியியலாளர் சண்.குகவரதன் பெற்றுக் கொள்வார்.

அத்துடன் மாநாட்டு ஆதார சுருதி உரையினை பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் நிகழ்த்தவுள்ளார். மூதலாம் நாள் மாநாட்டின் ஆய்வரங்குகள் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 4.45 மணி வரை இடம் பெறும்.

மாநாட்டின் இரண்டாம் , மூன்றாம் நாள் ஆய்வரங்குகள் தினமும் காலை 8. 30 மணி முதல் மாலை 4.45 மணி வரை நடைபெறும். அத்துடன் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணி வரை கலை இலக்கிய நிகழ்வுகள் நடத்தப்படும்.

இம்மாநாட்டில் கலை இலக்கியவாதிகள் ஏழு பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த அன்புமணி இரா.நாகலிங்கம், ந. பரமேஸ்வரி, செய்யித் ஹஸன் மௌலானா, வடமாகாணத்தை சேர்ந்த சிற்பி சரவணபவன், கல்வயல் வே. குமாரசுவாமி, ஓவியர் ஆசை இராசையா, மலையகத்தை சேர்ந்த சக்தீ பாலஐயா ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# கல்வியியற் கல்லூரிகளின் கற்கை காலம் 4 வருடங்களாக அதிகரிக்கும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளின் தற்போதைய மூன்று வருட டிப்போளாமா பாட நெறியினை கற்கை காலத்தின நான்கு வருடங்களாக அதிகரித்து பட்டதாரிகளாக ஆக்குவதற்கான யோசனையொன்றினை நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட கல்வி ஆணைக்குழுவுக்கு முன்வைத்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் கல்லூரியின் தலைவர் ஏ.எல். ஏ. ரசூல் தலைமையில் இடம்பெற்றது. கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் விசேட விருந்தினராக கலந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்வியியற் கல்லூரிகளில் கற்போரின் கற்கைக் காலத்தினை நான்கு ஆண்டுகளாக அதிகரிக்கும் ஒரு யோசனையை விசேட கல்வி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளோம்.

இதன் மூலமாக கல்வியியற் கல்லூரிகளில் கற்போர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோடு தேவையானதொரு வலையமைப்பினை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பட்டதாரிகளாக வெளியேற முடியும். (அ-2)


டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் பாவனைக்கு உட்படுத்தி தரப்படும்.

No. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

TP:- 021 2228680, 077 5925088, 075 0407430

(8508)

# யாழில் 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஏதிலிகள்

## நலன்புரி அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாண குடாநாட்டில் மாத்திரம் 44 ஆயிரத்து 559 பேர் தொடர்ந்தும் அகதி வாழ்க்கையை வாழ்ந்து வருவதாக இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

இவர்கள் அனைவரும் 12 ஆயிரத்து 459 குடும்பங்களை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் 53 நலன்புரி நிலையங்களிலும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் அடைக்கலம் பெற்று வசித்து வருவதாகவும் அந்த அமைப்புகள் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் பலர் அடைக்கலம் புகுந்திருந்த புகையிரத நிலைய கட்டடங்களிலிருந்து புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்படபோவதாக அறிவித்து வெளியேற்றப்பட்டு நடுவீதியினில் விடப்பட்டுள்ளதாகவும் இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தவிர உயர்பாதுகாப்பு வலயமாக தொடர்ந்தும் பேணப்பட்டு வரும் வலிகாமம் வடக்கு மட்டும் மீளக்குடியமர விண்ணப்பித்து சுமார் 9 ஆயிரத்து 904 குடும்பங்களை சேர்ந்த 31 ஆயிரத்து 524 பேர் காத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

45 கிராமசேவையாளர் பிரிவுகளை கொண்ட வலிகாமம் வடக்கு பகுதியில் 20 பிரிவுகளிலேயே இதுவரை மக்கள் மீளக்குடிய மர அனுமதிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 25 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒன்பதில் மாத்திரம் பகுதி பகுதியாக மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன் ஏனைய 16 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வு குறித்து பாதுகாப்பு பிரிவினர் மௌனம் சாதித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இருந்த போதும் அரசாங்கமோ வடக்கில் மக்கள் முழுமையாக மீளக்குடியமர்வு செய்யப்பட்டு விட்டதாகவும் வவுனியா மெனிக்பாம் முகாமிலுள்ள மக்கள் மாத்திரம் சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டியிருப்பதாக சர்வதேசத்திற்கு தெரிவித்து வருகின்றது. (அ-2)

## காட்டில் பரவிய தீயால் 25 ஏக்கர் நிலம் நாசம்

(கொழும்பு)

மொனராகலை பிபில பகுதியில் உள்ள நில்கலா காட்டில் பரவிய தீயினால் 25 ஏக்கர் எரிந்து நாசமாகியுள்ளது. நேற்று முன்தினம் பகல் தொடக்கம் தீ பரவியுள்ளது.

தீயை அணைக்க தீயணைப்பு படையினர், வனவள அதிகாரிகள் முயற்சி எடுத்துள்ள போதும் தீ தொடர்ந்தும் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



கடற்படையின் 76 உத்தியோகத்தர்கள் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் நிகழ்வு திருகோணமலையிலுள்ள கடற்படை பயிற்சிக் கல்லூரியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

## நேர்மையாக சேவையாற்றும் போதே உரியவேளையில் உரிய இடம் கிடைக்கும்

### பொலிஸ்மா அதிபர் ஆலோசனை

(கொழும்பு)

பல்வேறு தேவைகளுக்காக பொலிஸ் நிலையத்திற்கு வரும் மக்களுக்கு பொலிஸார் அன்புடன் சேவையாற்ற வேண்டும். ஏதோ ஒரு பிரச்சினை காரணமாக பாதிப்புக்குள்ளாகி பொலிஸ் நிலையத்திற்கு வரும் மக்களுக்கு சேவை புரிவதன் மூலமாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் புண்ணியம் தேடிக் கொள்ள முடியும். எனவேதான் பொலிஸ் சேவையில் சேர ஒருவர் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறேன் என பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் பொலிஸாருக்கான நலன்புரி திட்டமாக தொடர்ச்சியாக இடம்பெறும் சியபத் வில ஒன்றுகூடல் மற்றும் கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேங்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் சட்டத்தை நிலை நிறுத்துவதற்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை பொலிஸ் சேவை உரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

1971,1988,1989 ஆம் ஆண்டுகள் மற்றும் பயங்கரவாத பிரச்சினை நிலவிய காலப் பகுதிகளில் தேசிய பாதுகாப்புக்கு சவால் ஏற்பட்ட போது எமது பொலிஸாரே அதற்கு முதலில் முகம் கொடுத்தனர்.

ஒருவருக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டதன் பின்னரே அதற்கான தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் ஒருவர் பொலிஸ் நிலையம் வருகிறார்.

மனச்சாட்சிக்கு ஏற்றவிதத்தில் பொலிஸார் கடமையாற்ற வேண்டும். நேர்மையாக நடக்கும் போது தான் உரிய வேளையில் உரிய இடம் ஒருவருக்கு கிடைக்கும் என்றார். (அ-2)

## குளவி கொட்டிய 143 பேரில் 118 பேர் வைத்தியசாலையில்

கெக்கிராவ-மடாடுகம கொட்டகல பகுதியில் கூட்டம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த போது குளவி தாக்கியதில் பாதிக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றைய தினம் காலை இடம்பெற்ற இந்த கூட்டத்தில் பிக்குகள் உள்ளிட்ட 600 பேர் வரை கலந்து கொண்டதோடு அதில் 300 பேர் குளவி கொட்டலுக்கு ஆளாகியுள்ளனர். அதில் 100 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

தம்புள்ள வைத்தியசாலையில் 75 பேர் வரை அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தம்புள்ள கொட்டகலை பிரிவினரால் நேற்றைய தினம் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 3 பௌத்த பிக்குகள் உட்பட சுமார் 43 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகிறது. (அ-2)

## முன்னாள் எம்.பி. சந்திரநேருவுக்கு மூன்று மணிநேரம் விளக்கமறியல்

(திருகோணமலை)

திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த வருடம் நடந்த கலவரம் தொடர்பாக பொத்துவில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் நீதிமன்றுக்கு வந்திருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் நீதிமன்ற உத்தரவின் பேரில் மூன்று மணித்தியாலங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி திருக்கோவில் பகுதியில் மூன்று மர்ம மனிதர்களை பொதுமக்கள் பிடித்து பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஆனால், பொலிஸார் இம் மர்ம மனிதர்களை (கிறிஸ் மனிதன்) விடுவிக்க முயற்சியெடுப்பதாக அறிந்த பொதுமக்கள் மிகவும் கோபமுற்று பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

மக்களின் எதிர்ப்பு அதிகமானதால் படையினர் ஸ்தலத்துக்கு வந்து துப்பாக்கி பிரயோகம் செய்து மக்களை விரட்டியடித்தனர். இச்சம்பவத்தில் மக்களை திரட்டி கலகத்தில் ஈடுபட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் மீது திருக்கோவில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் நீதிமன்றில் ஆஜராகுமாறு சந்திரநேருவை அழைத்திருந்தும் கூட அவர் லண்டன் சென்றிருந்ததால் அவரால் சமுகமளிக்க முடியவில்லை. இதனால் இவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நீதிமன்றுக்கு ஆஜராகியிருந்தார். இதன் போது வழக்கை விசாரித்த நீதிபதி மூன்று மணித்தியாலங்கள் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பின்னர் சாட்சிகள் வரவழைக்கப்பட்டு சந்திரகாந்தனை பிணையில் செல்ல அனுமதியளித்தார். மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(அ-2)

## ரிசானா நபீக் வழக்கின் பிரதான சந்தேக நபர் பிணை கோருகிறார்

சவுதி அரேபியாவில் மரண தண்டனை பெற்றுள்ள இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கை சவுதிக்கு போலியான வழியில் அனுப்பி வைத்த பிரதான சந்தேக நபருக்கு பிணை வழங்குமாறு அவரது சட்டத்தரணி கொழும்பு மேல் நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

முன்வைக்கப்பட்ட இந்த கோரிக்கையை நேற்றைய தினம் பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ பிணை கோரிக்கை தொடர்பில் எதிர்ப்பு இருக்குமானால் தெரிவிக்க சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் மே முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் குறைந்த வயதுடையவராக இருந்த ரிசானாவை சவுதிக்கு அனுப்ப உதவியமை, போலி ஆவணங்களை தயாரித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து மூன்று சந்தேக நபர்கள் மீதும் சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மூன்று சந்தேக நபர்களில் இருவர் அண்மையில் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்ட நிலையில் அவர்களுக்கு இரண்டு வருட கடூழிய சிறையும் 60 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தண்டனையாக வழங்கப்பட்டது.

இந்த வழக்கின் பிரதான சந்தேக நபரான தம்பிலேப்பை அப்துல் சலாம் தமது சட்டத்தரணி ஊடாக பிணை கோரியுள்ளார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதுவரையில் சந்தேக நபர்களை விளக்கமறியிலில் வைக்குமாறு நீதிபதி சுனில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# குழுக்களை அமைப்பதில் குறியாகவுள்ள அரசாங்கம்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் கட்சியின் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக சிறிலங்கா சுதந்திர கட்சி மத்திய செயற்குழுவினால் நான்கு பேர் கொண்ட குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திலேயே அந்த குழு நியமனம் இடம்பெற்றது.

குறித்த குழுவுக்காக அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, பசில் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய மெத்திவ் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் வாரத்தில் இந்தக் குழுவினால் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை தொடர்பாக ஆராயப்பட்டு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்று ஜனாதிபதிக்கு கையளிக்கப்படவுள்ளது. (அ-2)

# நடிகர்களை நாட்டுக்கு அழைப்பதன் மூலம் மக்களை ஏமாற்ற முடியாது

## கயந்த எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்த நடிகர், நடிகைகளை அழைத்து வந்து நகர் வசந்தத்தை காட்டி அரசாங்கம் தன்னை தற்காத்து கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவ்வாறு எந்த வசந்தத்தை காட்டினாலும் மக்களை ஏமாற்ற முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். இலங்கையின் தேசிய விளையாட்டான கைப்பந்தாட்டத்தை மேம்படுத்த ஏன் போட்டிகளை ஏற்பாடு செய்வதில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. எனினும் இலங்கையில் அதன் விலைகள் உயர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இந்தியன் ஒயில் நிறுவனம் இலாபத்தில் இயங்கும் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எப்படி நட்டத்தில் இயங்குகிறது எனவும் கயந்த கேள்வி யெழுப்பியுள்ளார். (அ-2)

# ஜெனீவாவில் தொலைபேசி விற்பனை நிலையங்கள் புலிகளுக்கு சொந்தமானவை

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அதிகளவான தொலைபேசி விற்பனை நிலையங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்த மானவை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

செல்லிடப் பேசிகள் மற்றும் செல்லிடப் பேசி மீள்நிரப்பு அட்டை விற்பனை நிலையங்கள் 99 வீதமானவற்றின் பூரண உரிமை புலிகளின் வசம் காணப்படுகின்றது. அண்மையில் ஜெனீவா சென்றிருந்த போது இந்த விடயம் தெரியவந்தது.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் அனைவரும் இந்த விற்பனை நிலையங்களில் செல்லிடப் பேசிகளையும், மீள்நிரப்பு அட்டைகளையும் கொள்வனவு செய்துள்ளனர்.

தெரிந்தோ தெரியாமலோ இவர்கள் புலிகளுக்குப் பணம் வழங்கியுள்ளனர். ஜெனீவா செல்வோர் செல்லிடப் பேசி, மீள் நிரப்பு அட்டை போன்றவற்றை கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

எனினும், அவ்வாறு கொள்வனவு செய்வதன் மூலம் நாம் புலிகளுக்கு உதவி வழங்குகிறோம். சுவிட்சர்லாந்திற்கு விஜயம் செய்த போது நான் தொலைபேசிகளைப் பயன்படுத்தவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு மரண தண்டனை

கொலை வழக்கொன்றில் குற்றவாளிக்ளாக காணப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு தங்காலை மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்துள்ளது.தங்காலை மேல் நீதிமன்றத் தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி சந்திரசேன ராஜபக்ஷ இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளார்.

கடந்த 1986 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி வலஸ்முள்ள பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவரை கொலை செய்ததாக குறித்த மூவருக்கும் எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஆறுபேருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் ஒருவர் வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய இருவர் இந்த வழக்கில் நிரபராதிகள் என தெரிவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 30

★ 1431-நூறாண்டுகள் போர்: பிரெஞ்சு வீராங்கனை (19 வயது) ஜோன் ஒஃப் ஆர்க் ரோவென் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தினால் உயிருடன் தீ வைக்கப்பட்டு மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்.

★ 1539-தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் ஹெர்னாண்டோ டி. சோட்டோ 600 படையினருடன் புளோரிடாவை அடைந்தான்.

★ 1588-30 ஆயிரம் பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா என்ற 130 ஸ்பானியப் போர்க்கப்பல்களின் கடைசிக் கப்பல் ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து புறப்பட்டது.

★ 1635-முப்பதாண்டுப் போர்: பிராக் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1815-இலங்கையிலிருந்து காயப்பட்ட போர்வீரர்களை ஏற்றி வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆர்னிஸ்டன் என்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கு அருகில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 378 பேரில் 372 பேர் உயிரிழந்தனர்.

★ 1845-திரினிடாட் டொபாகோவுக்கு முதல் தொகுதி இந்தியர்கள் வந்திறங்கினர்.

★ 1883-நியூயோர்க் நகரில் புரூக்ளின் பாலம் இடிந்து விழப் போவதாக எழுந்த வதந்தியை அடுத்து இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர்.

★ 1913-முதலாம் பால்க்கன் போர்: லண்டன் உடன்பாடு 1913 இல் எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஆயிரம் பிரித்தானிய போர் விமானங்கள் ஜேர்மனியின் கொலோன் நகரில் 90 நிமிடங்கள் குண்டு மழை பொழிந்தன.

★ 1966-முன்னாள் கொங்கோ பிரதமர் எவரீஸ் டே கிம்பா மற்றும் பல அரசியல் தலைவர்கள் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்கள்.

★ 1971-செவ்வாய்க்கோளின் 70 சதவீத பகுதியை படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1972-இஸ்ரேலின் விமான நிலையத்தில் ஜப்பானிய செம்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் 24 பேர் உயிரிழந்தனர்.

★ 1981-வங்காளதேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது ஜனாதிபதி சியாவுர் ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1987-கோவா தனி மாநிலமாகியது.

★ 1998-வடக்கு ஆப்கானிஸ்தானில் 6.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★ 2003-எயார் பிரான்சின் கொன்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது.

### பிறப்புக்கள்

★ 1899-மணிக்கொடி சீனிவாசன், தமிழ்,ஆங்கிலப் பத்திரிகையாளர் (இ.1975)

★ 1931-சுந்தரராமசாமி, நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர் (இ.2005)

★ 1934-அலெக்சி லியோனொவ், சோவியத் ரஷ்யாவின் விண்வெளி வீரர்

### இறப்புக்கள்

★ 1431-ஜோன் ஆஃப் ஆர்க், பிரெஞ்சு வீராங்கனை (பி.1412)

★ 1960-போரிஸ் பாஸ்ரர்நாக், ரஷ்ய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1890)

### சிறப்பு நாள்

★ திரினிடாட் டொபாகோ-இந்தியர்களின் வருகை தினம் (1845)

# ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான தெற்காசிய பயிற்சி நிலையம் இலங்கையில்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான தெற்காசிய பயிற்சி நிலையம் வெகுவிரைவில் இலங்கையில் ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதற்காக அனுமதி அமைச்சரவை வழங்கியிருப்பதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,தெற்காசிய நாடுகளில் ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிலையம் முதன்முதலில் இலங்கையிலேயே ஸ்தாபிக்கப்படவுள்ள நிலையில் மீபேயில் இப்பயிற்சி நிலையத்தினை நிறுவுவதற்கென அரசாங்கம் 587 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

யுனெஸ்கோ அமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டிருக்கும் ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிலையமாக இது இயங்குமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பயிற்சி நிலையம் சார்க் பிராந்தியத்தில் அங்கம் வகிக்கும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆசிரிய பயிற்றுவிப் பாளர்களது மத்திய பயிற்சி நிலையமாக விளங்குமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

யுனெஸ்கோ அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் தெற்காசிய நாடுகளுக்கு ஆசிரிய பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிலையமொன்றின் அவசியம் குறித்து அந்த அமைப்பு வலியுறுத்தும் போது அதனை இலங்கையில் ஸ்தாபிப்பது குறித்த யோசனையை முன்வைத்திருந்தேன்.

தெற்காசியாவில் சனத்தொகை கூடிய ஏனைய நாடுகளும் இதற்கான கோரிக்கைகளை முன்வைத்திருந்த நிலையில் இலங்கைக்கே அதற்கான வாய்ப்பு கிட்டியிருந்தது.

இந் நிலையத்தில் உள்நாட்டு மற்றும் ஏனைய சார்க் நாடுகளில் ஆசிய பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிகள், கல்வி தொடர்பான ஆராய்ச்சிகள், அனுபவ பரிமாற்றங்கள், கலந்துரையாடல், பயிற்சிப் பட்டறைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் நிகழும் முக்கிய மையமாக விளங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புதினம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்க பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.சிவசங்கர், சிறப்பு விருந்தினர்களாக வலி.தென் மேற்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராசா, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய ஆசிரியர் சி. சிவஞானராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# பொதுச்சொத்துக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டு; நபர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச, தனியார் காணிகளில் மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டிலும் புகையிரத கடவைக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டிலும் 6 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பேரில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதவான் மா. கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி மு.றெமீடியஸ் குறித்த அறுவரையும் பிணையில் விடுவிக்கக் கோரி விண்ணப்பம் செய்தார்.

பொலிஸ் தரப்பில் ஆஜராகி இருந்த யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பரிசோதகர் சமன் சிகேரா பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லை என தெரிவித்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்து வாதாடிய சட்டத்தரணி றெமீடியஸ் கடந்த காலங்களில் வட பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது புகையிரத தண்டவாளங்கள் அவர்களின் தேவைக்காக வெட்டியெடுக்கப்பட்டன.

மேலும் அரச காணியில் மண் அகழ்ந்ததற்கான சான்றாதாரங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை. இதனால் குறித்த புகையிரதக் கடவை ஏற்கனவே சேதமடைந்து காணப்பட்டுள்ளதோடு தவிர இவர்கள் 6 பேரும் குறித்த தண்டவாளத்தைச் சேதமாக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் மண் அகழ்வினை பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து சந்தேக நபர்களினை பிணையில் விடுவிக்காமல் தடுப்பது அடிப்படை உரிமைமீறலாகும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த அறுவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டார். (அ-4)

# முதுகலைமாணி கற்போருக்கு கற்கை விடுமுறை வழங்க ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாண பல்கழைலக்கழகத்தில் முதுகலைமாணி கற்கைநெறிகளுக்கான தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த கற்கை விடுமுறை கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவிற்கமைய வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகங்களில் முதுகலைமாணி கற்கைநெறிக்காக கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 14 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் தமது கற்கை நெறிகளினை தொடர்வதற்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சிடம் கற்கை விடுமுறைகள் கோரியிருந்தனர்.

இதற்கு மாணவர்களின் நலன்கருதி ஆசிரியர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்படாது என மாகாண கல்வியமைச்சினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் 14 ஆசிரியர்களும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் தமது பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடியதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் கிழக்கு மாகாண ஆளுநரிடம் இது தொடர்பான பிரச்சினைன்யை தெளிவுபடுத்தி ஆசிரியர்களுக்கான கற்கை விடுமுறையினை வழங்குமாறு கோரியிருந்தார்.

இந்நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் கற்கை விடுமுறையை வழங்குவதாக கிழக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் ஜனாப். ஏ.எம்.நிஷாம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். பல்கலைக்கழகங்களுக்கு உயர் கல்வியைத் தொடர ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டு வந்த கற்கை விடுமுறை உரிமை இதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் இனிமேல் உயர் கல்வியைக் கற்கும் ஆசிரியர்கள் தயக்கமின்றி அதற்கு விண்ணப்பித்து தங்களின் வாண்மையை விருத்தி செய்து கொள்ள முடியும் என பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-4)

# பொன்சேகா மிக எளிமையாக நடவடிக்கையை முன்னெடுப்பார்

## அவரது மகள் அப்ஸரா கூறுகிறார்

(கொழும்பு)

தனது தந்தை மிக எளிமையான முறையில் தனது நடவடிக்கையை முன்னெடுப்பார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் சிரேஷ்ட புதல்வி அப்ஸரா பொன்சேகா தெரிவிதர்துள்ளார்.

கடந்த இரண்டரை வருடமாக தங்களது குடும்பம் கடும் சோதனைக்கு உள்ளாக்கியிருந்ததாகவும் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் கூறியுள்ளார்.

நாட்டை வெற்றி பெறச் செய்வதும் அதற்கு சுதந்திரம் வழங்குவதுமே அவரது பிரதான இலக்கு ஆகும். அவர் தனது அதிகாரம் மற்றும் அந்தஸ்து குறித்து கவலைப்படுவார் என நான் நினைக்கவில்லை. இதற்கு என அவர் ஒரு தனி வழியை அமைத்துக் கொள்வார் என அவர் கூறினார்.

இந்த யுத்தத்தை இன்னொரு இராணுவத் தளபதி தொடர வேண்டிய நிலைமையில் விட்டுச் செல்ல மாட்டேன் எனக் கூறிய அவர் தனது வார்த்தையை 100 சதவீதம் செயலில் காட்டினார். அதுபோலவே இதையும் அவர் செய்து காட்டுவார் எனவும் அப்ஸரா பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

# தகராறில் ஈடுபட்டவர்கள் செலுத்தினர் ஐயாயிரம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் விதமாக வீதியில் நின்று தகராறு செய்த தென்பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களுக்கு யாழ். நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது


அகடபாவத மாவத்த பிரதேசம் மற்றும் ஊறுகட வலியப்பன்ன பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதியில் நின்று சண்டை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 23 ஆம் திகதி யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு மீண்டும் நேற்று யாழ். நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த இருவருக்கும் தலா 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதித்து தீர்ப்பளித்தார். (அ-4)

# சான்றோர் தினம்

பள்ளம்புலம் முருகுமூர்த்தி சனசமூக நிலையத்தினால் சான்றோர் தினம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நிலையத்தலைவர் க.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கௌரவிக்கப்படும் சான்றோர்களாக அமரர்களான ஆறுமுகம் தில்லைநாதப் புலவர், முன்னைநாள் அதிபர்களான பண்டிதர் கதிரவேலு இராசையா, கவிஞர் தில்லையம்பலம்- சிவகாமி ஐயம்பிள்ளை பொன்னையா, பிரசித்த நொத்தாரிசுகளான விசுவநாதர் சேதுகாவலர், மருதையினார் கந்தையா, சுப்பிரமணியம் இராமச்சந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ.இரத்தினம், முன்னைநாள் ஆசிரியர் நாகலிங்கம் நடராஜா, வித்துவான் பண்டிதர் சைவப்புலவர் கனகசபை வேந்தனார் ஆகியோரது படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-7)



வாழ்வு எழுச்சி குடிசைக் கைத்தொழில் கண்காட்சி அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் விருந்தினர்கள் இணைந்து நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 143

மாக்கெற் கார்டினில் அமெரிக்கரின் வான்வழி இறக்குபடை நடவடிக்கை



டிசெம்பர் 28 ஆம் திகதி ஹிட்லர் பிரதான படைத்தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அர்டேன்னி நடவடிக்கையைப் பற்றி விவாதிக்கும்போது இத்ன் தோல்வியை ஒப்புக்கொண்டு, அங்கிருந்த அமெரிக்கத் துருப்புகளை ஒழித்துக்கட்டும் பொருட்டு அர்டேன்னியிலிருந்து தெற்காக புதிய தாக்குதல்களைத் தொடுக்க முடிவு செய்தான்.

வடக்கு அல்சாஸில் 7-வது அமெரிக்கப்படையைச் சுற்றிவளைத்து அழிக்கும் நோக்கத்துடன் அர்டேன்னிக்குத் தெற்கே பாசிச ஜேர்மனியத்துருப்புகள் எதிர்த்தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டன. பித்சே, ஸ்டிராஸ்புர்க், கோல்மார் தாக்குமுனை ஆகிய இடங்களிலிருந்து 1-வது, 19-வது படைகளைக்கொண்டு தாக்குதல் தொடுப்பதன் மூலம் இந்த நடவடிக்கையை மெற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

1945 ஜனவரி ஆரம்பத்தில் மேற்கு ஐரோப்பாவில் நேசநாட்டவரின் நிலை சிக்லானதாக இருந்தது. வடக்கு அல்சாஸில் 7-வது அமெரிக்கப்படை, பாசிஸ்டுகளின் தாக்குதல்களின் கீழ் இழப்புகளைச் சந்தித்து, பின்வாங்கியது. ஐசன் கோவரின் எல்லாசேம இருப்புகளும் செலவாயின. இது பெரும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டு இதன் மூலம் கடுமையான சண்டைகள் நடைபெறுகின்றன. எத்தருணத்தில் வேண்டுமானாலும் உயர் மட்டப்பிரதான படைத் தலைமை பெரும் முடிவுகளை எடுக்க நேரிடலாம். "முன்முயற்சியைத் தற்காலிகமாக இழந்தபின் மிகப்பரந்த போர்முனையைப் பாதுகாக்கும் ஒரு நிலை எவ்வளவு கவலை ஊட்டுவது என்பது உங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து உங்களுக்கு நன்றாகத் தெரியும்... வீஸ்லா போர்முனையிலோ அல்லது வேறு ஏதாவது இடத்திலோ 'ஜனவரி மாதமோ அல்லது வேறு எத்தருணத்திலோ- இவற்றைப்பற்றி நினைவூட்ட அனேகமாக நீங்கள் விரும்பக்கூடும்- பெரும் ருஷ்யத் தாக்குதலை நாங்கள் எதிர்பார்க்கலாமா என்பதைப்பற்றி நீங்கள் தெரியப் படுத்தினால், நான் நன்றியுடையவனாயிருப்பேன்" என்று சர்ச்சில் ஸ்டாலினுக்கு எழுதினார்.

தனது நேசநாட்டுக்கடமைக்கு விசுவாசமான சோவியத்யூனியன் இவ் வேண்டுகோளுக்குச் செவிமடுத்தது. சோவியத் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் சோவியத் துருப்புகள் தாக்குதலைத் தொடங்கும் நேரத்தை ஜனவரியின் இரண்டாவது பாதியிலிருந்து முதல்பாதிக்கு மாற்றியது. பால்டிக் கடலிலிருந்து கர்ப்பாத்து மலைகள் வரை ஜனவரி 12-இல்தொடங்கிய சோவியத் இராணுவத்தின் பொதுத் தாக்குதல் மேற்கே தனது தாக்குதல் திட்டங்களைக் கைவிடும்படி பாசிச ஜேர்மனிய படைத் தலைமையைக் கட்டாயப் படுத்தியது. *மேலும் அர்டேன்னி முகப்பிலிருந்த ஜேர்மனியப் படைத்திரட்டின் முக்கிய தாக்குதல் சக்தியாக எஸ்.எஸ். 6-வது டாங்கிப்படையும் மற்ற சில யூனிட்டுகளையும் அவசர அவசரமாக சோவியத்-ஜேர்மனியப் போர்முனைக்கு மாற்றும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.* இது 1945 ஜனவரி 25 ஆம்திகதி வாக்கில் அர்டேன்னியில் நிலவரத்தைப் புனர்நாட்ட அமெரிக்கத் துருப்புகளுக்கு உதவியது. ஜனவரி 27 வாக்கில் ஹிட்லர் துருப்புகள் வடக்கு அல்சாஸில் ஆரம்பநிலைக்கு பின்வாங்கிச் சென்றன.

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

இவ்வாறாக 1944 ஆம் ஆண்டு பெரும் வெற்றிகளோடுகூட நேச நாட்டுத் துருப்புகள் தமது நடவடிக்கையில் கணிசமான தவறுகளையும் இழைத்தன. உதாரணமாக எதிரியைப் பெரிதும் விஞ்சிநின்ற நேசநாட்டுத் துருப்புகள் நார்மாண்டியில் தாக்குமுனையை விரிவாக்குவதற்காகப் போதுமானளவு தீவிரமாகப் போராடவில்லை. இவற்றால் பிரான்சிலும் பெல்ஜியத்திலும் நெதர்லாந்திலும் பாசிச ஜோமனியத்துருப்புகளின் ஒரு பெரிய படைத்திரட்டைக் கூடச் சுற்றிவளைத்து முறியடிக்க இயலவில்லை. ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் எதிரியைப் பெரிதும் விஞ்சிநின்ற போதிலும் *அர்நேம்* நடவடிக்கையில் நேசநாட்டினர் பெரும் தப்புக்கணக்குகளைப் போட்டனர். முன்வைக்கப்பட்ட இலட்சியம் அடையப்படவில்லை. நேசநாட்டுப் படைத் தலைமை, அர்டேன்னியில் ஜேர்மனியர்களின் எதிர்த்தாக்குதல் திட்டத்தை உரியநேரத்தில் கண்டுபிடிக்கவில்லை, எதிரியின் தாக்குதல் வாய்ப்புகளைக் குறைத்து மதிப்பிட்டது. இவை பிரிட்டிஷ்-அமெரிக்க துருப்புகளுக்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியது.

மியூஸ் நதியின் பாலங்களை பாதுகாப்பதற்காக விரையும் பிரிட்டிஷாரின் ஃபயர் ஃலை-டாங்கி



### 1944 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற இராணுவ நடிவடிக்கைகள்

1943 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தென் இத்தாலியிலிருந்து பின்வாங்கயதும் பாசிச ஜோம்னியத் துருப்புகள் உரோம் நகரத்திற்குத் தெற்கே 120 கி.மீ. தூரத்தில் சான்க்ரோ, கரில்யானோ ஆறுகளின் வழியே சென்ற, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தற்காப்பு எல்லையில் 1944 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலையாக நின்றன. மத்திய இத்தாலியைத் தன்வசம் வைத்திருப்பதுதான் ஹிட்லர் படைத் தலைமையின் நோக்கமாக இருந்தது.

இத்தாலியிலிருந்த அமெரிக்க-பிரிட்டிஷ் துருப்புகள் பிரிட்டிஷ் ஜெனரல் அலெக்சாந்தரின் தலைமையின் கீழ் 15-வது படைத் தொகுதியாக இணைந்திருந்தன. இதில் 5-வது அமெரிக்க மற்றும் 8-வது பிரிட்டிஷ் படைகள்- மொத்தமாக 16 காலாட்படை, 2 கவச டாங்கி, 1வான் இறக்குபடை டிவிஷன்களும் 4-வது விஷேட டாங்கிப் பிரிகேடுகளும் அடங்கியிருந்தன.

*4ஆயிரம் விமானங்களையுடைய வான்படையும் 130 பிரதானரகப் போர்க்கப்பல்கள் மற்றும் இறக்குப் படைக் கப்பல்கள் அடங்கிய கடற்படையும் 15வது படைத் தொகுதிக்கு ஆதரவளித்தன.



செயின்வித் நகரை மீண்டும் கைப்பற்றுவதற்காக - (ஜேர்மனியர்களால் அழிக்கப்பட்டுக்கிடக்கும் தங்களது டாங்கியைக் கடந்து) முன்னேறும் அமெரிக்கப்படை



கைப்பற்றப்பட்ட அமெரிக்க இராணுவத் தளபாடங்களைக் கடந்து முன்னேறும் ஜேர்மனிய இராணுவம்

(தொடரும்)

# சொல்ஹெய்மை தூதுவராக நியமிக்க நோர்வே மறுப்பு



போர் நிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டிருந்த காலப் பகுதியில் இலங்கையில் விசேட சமாதான தூதுவராக செயற்பட்ட எரிக்சொல்ஹெய்ம் எதிர்பார்த்த ஐ.நா. தூதுவர் பதவி அவருக்கு கிடைக்காமல் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே அமைச்சரவை உறுப்பினராகும் தகைமை அவருககு வழுங்காத நிலையில் ஐக்கிய நாடுகளுக்கான நோர்வேயின் தூதுவராக நியமனம் கிடைக்கும் என எரிக் சொல்ஹெய்ம் எதிர்பார்த்திருந்தார்.

இருந்த போதும் அந்த பதவியினை எரிக்சொல்ஹெய்மிற்கு வழங்க நோர்வே அரசு மறுத்துள்ளது. அந்த பதவிக்கு பிறிதொருவரை நியமிக்க நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் நோர்வே தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஐக்கிய நாடுகளுக்கான நியமிக்கப்பட்டுள்ள புதிய தூதுவர் கடந்த டிசெம்பர் மாதம் இலங்கைக்கும் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஜப்பான் மற்றும் பாக்.கடற்படை கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்



ஜப்பானின் இரண்டு கடற்படை கப்பல்களும் பாகிஸ்தான் ஒரு கடற்படை கப்பலும் நேற்று முன்தினம் கொழும்பு துறை முகத்தை வந்தடைந்ததாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் IKAZUCHI என்ற கப்பல் 151 மீற்றர் நீளமும் 4 ஆயிரத்து 550 தொன் நிறையை கொண்டுள்ளதுடன் 180 படையினரை தன்னகத்தே கொண்டுள்ளது.

இதேவேளை பிறிதொரு ஜப்பான் கப்பலான SAWAGIRI 137 மீற்றர் நீளமும் 3 ஆயிரத்து 550 தொன் நிறையையும் 190 படையினரையும் கொண்டுள்ளது.

சீனாவில் இருந்து திரும்பும் வழியில் கொழும்பு துறைமுகத்தை அடைந்துள்ள AZMAT என்ற பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் 63 மீற்றர் நீளம் கொண்டதாகவும் 631 தொன் நிறை கொண்டதாகவும் உள்ளது. அதில் 77 கடற்படைச் சிப்பாய்கள் கடமையாற்றுகின்றனர். இரு நாட்டு கடற்படை அதிகாரிகளுடன் மேல் மாகாண கடற்படை தளபதி ரியர் அட் மிரல் டி எஸ் உடவத்த சந்திப்புகளை நடத்தியுள்ளார்.

ஜப்பானிய கப்பல்கள் நேற்றைய தினமும் பாகிஸ்தான் கப்பல்கள் நாளைய தினமும் கொழும்பு துறைமுகத்திலிருந்து தமது நாடுகளை நோக்கி பயணிக்க வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தேர்தலில் போட்டியிட சரத்திற்கு அனுமதி வழங்க வேண்டும்-கயந்த

ஆளும் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் பிரச்சினை உருவாகியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அந்தக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான பிரச்சினையையும் அரசாங்கம் தற்போது எதிர்நோக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.மாநகர சபையிலுள்ள அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இன்று எதிர்க்கட்சி தலைவர்களைப் போன்று செயல்படுவதற்கும் முயற்சிப்பதாகவும் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாகவும் இதன் போது அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

யுத்தவெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வீரம் மிக்க படை வீரரான சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டதாக அரசாங்கம் கூறினாலும் அவருக்கு பகுதியளவிலான விடுதலையே வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

இயலுமாயின் முன்னாள் இராணுவத் தளபதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் நீக்கி தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையை அவருக்கு வழக்குமாறு அவர் அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார். (அ-2)

# புதையல் தோண்ட முயற்சித்த 10 பேர் கைது

ஹொரவப்பொத்தானையில் உள்ள விகாரை ஒன்றுக்கு அருகில் புதையல் தோண்ட முயற்சித்த 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொரவப்பொத்தானை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நேற்று கெப்பற்றிக்கொல்லாவ நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளவேனிற்கால வேப்பம்பூ, இலுப்பம்பூக்களின் மருத்துவக்குணங்கள்

**வேப்பம் பூ சாதப்பொடி**

வேப்பம்பூ- 10 கைபிடி
மிளகாய்- காய்ந்தது எட்டு
மிளகு- 1/2 ரீஸ்பூன்
உழுந்து- பருப்பு 25 கிராம்
கடலை - பருப்பு 10 கிராம்
உப்பு - தேவையானளவு
பசுநெய்- 10 கிராம்

வேப்பம்பூவை இளஞ்சூட்டில் வறுக்கவும். மிளகாய், மிளகு, கடலைப்பருப்பு, உழுந்து இவைகள் எல்லாவற்றையும் நெய்யில் தனித்தனியாக வறுக்கவும். மிளகாய், கடலைப்பருப்பு இவற்றை முதலில் அம்மியில் வைத்து பொடியாக்கவும். பின்னர் உழுந்து, மிளகு இவற்றையும் பொடியாக்கவும். உப்பையும் வைத்து பொடியாக்கி ஒரு போத்தலில் வைத்துக்கொள்ளவும். இதனை ஒரு ஸ்பூன் எடுத்து சாதத்தில் போட்டு கலந்து சாப்பிட்டு வந்தால் மிகவும் நல்லது.

இது பொதுவாக உடலில் கிருமிகள் வராது தடுப்பதுடன் நீரிழிவு நோயாளிகளுக்கும் சிறந்த உணவாகும்.

**வேப்பம் பூ வடகம்**

வேப்பம் பூ- 200 கிராம்
உழுத்தம்பருப்பு- 200 கிராம்
கறிவேப்பிலை- தேவையானளவு
செத்தல்மிளகாய்- 5
நறுக்கிய சிறிய வெங்காயம்- 25 கிராம்

எல்லாவற்றையும் நன்றாக அரைத்து வடகம் தட்டி நிழலில் உலர்த்தி தேவையான போது நெய்யில் பொரித்து பயன் படுத்துவது சிறந்ததாகும். தினமும் 2 நேர உணவில் சேர்ப்பது சிறந்ததாகும்.

வேப்பம் பூ 100 கிராம் அளவெடுத்து 50 கிராம் நெய்யில் வறுத்து பொடித்து தினமும் 1.2 கிராம் தினமும் ஒரு வேளை சாப்பிட்டு வர உடல் பலம் பெறும். உடலில் நோய்கள் அணுகாது. இவ்வாறு இந்தப் பூக்கள் கிடைக்கும் வைகாசி மாதத்தில் பூக்களை சேகரித்து உலர்த்தியோ அல்லது உடன் பூக்களாகவோ உணவுடன் சேர்ப்பதால் பல நோய்களில் இருந்து எமது உடலை பாதுகாப்பதுடன் குடலில் உள்ள புழுக்களை அழித்து குடலை சுத்தப்படுத்தி கபநோய்களையும் நீக்கி நோயின்றி ஆரோக்கியமாக வாழ முடியும்.





**இலுப்பம்பூ**
**Botanical Name-**
***Madhuca longifolia***
**Family-**
**Sapotaceae**

இளவேனில் காலத்திலேயே இலுப்பம் பூவும் கிடைக்கின்றது. இக்காலங்களில் இலுப்பம் பூவை சேகரித்து நிழலில் உலர்த்தி அல்லி தட்டி வறுத்து இடித்து சர்க்கரையுடன் சேர்த்து இடித்து உண்ணும் பழக்கம் எம்மக்களிடையே காணப்படுகின்றது. இலுப்பம் பூ சுவாச ரோகங்களை கட்டுப்படுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்தது.

100 கிராம் இலுப்பம் பூவில்
140 மில்லி கிராம்- பொஸ்பரஸ்
140 கிராம்- கல்சியம்
15 மில்லி கிராம்- இரும்புச் சத்து ஆகியன உண்டு.

இலுப்பம் பூக்களை பால் சேர்த்து அரைத்து பாலில் காய்ச்சி (10 கிராம் பூவுக்கு 200 மில்லி லீற்றர் பால்) குடித்து வர இருமல், ஆஸ்துமா என்பன தணியும்.

இலுப்பம் பூ மலர ஆரம்பிக்கும் போது அதில் பிறக்ரோஸ் மிகுதியாக இருக்கும். இது நன்கு மலர்ந்ததும் அது குளுக்கோசாக மாறும். பூ உதிரும் போது அதில் சுக்ரோசு அதிகரிக்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி


இறுதியில் அது Inverted Sugar ( அதாவது இனிப்பு தன்மையும் சுக்ரோசின் அளவும் மிகுதியாக காணப்படும்) ஆகவே பருவ காலங்களுக்கேற்ப கிடைக்கும் மருத்துவ முக்கியத்துவமுடைய தாவர பகுதிகளை அவற்றின் மருத்துவ முக்கியத்துவ குணங்களுக்கேற்ப பயன் படுத்திக்கொள்ள வேண்டும். (முற்றும்)

# எந்த திசையில் படுக்கையறை அமைக்க வேண்டும்?

உங்கள் வீட்டில் ஏர்கண்டிசன் (Airconditioner) எனப்படும் ஏ.சி பொருத்துவதாக இருந்தால் அதை வடமேற்கு மூலையில் அமைக்கப்படும் ஜன்னலுக்கு கீழ் பொருத்திக் கொள்ளலாம். ஸ்ப்லிட் ஏசியாக (Split AC) இருந்தால் அதையும் இதே மூலையின் மேற்குச் சுவற்றில் பொருத்தலாம்.

பண பீரோவை படுக்கையின் தென்மேற்கு மூலையில் கிழக்கு அல்லது வடக்கு பார்ப்பது போல் அமைக்க வேண்டும். கட்டிலையும் இவ்வறையின் தென்மேற்கு மூலையில் அமைத்து உறங்கும் போது தெற்குப்பக்கம் தலை வைத்து படுப்பது ஆழ்ந்த உறக்கத்தையும் மன நிம்மதியையும் அளிக்கும்.

படுக்கை அறை சுவற்றுக்குள் கூண்டு ஏற்படுத்தி கார்ப்போட்டு அமைக்க விரும்புபவர்கள் வட மேற்கு மூலையிலோ தென் கிழக்கு மூலையிலோ அமைக்க வேண்டும். தென் மேற்கு மூலையில் சுவற்றுக்குள் கூண்டு ஏற்படுத்தி கார்ப்போட்டை அமைப்பதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். ரெடிமட் கார்ப்போட்டை உபயோகிக்க விரும்பினால் இம்மூலையில் வைத்துக்




கொள்ளலாம்.

படுக்கையறையின் கதவை வடகிழக்கு மூலையில் வடக்கு அல்லது கிழக்கு பார்ப்பது போல் அமைக்க வேண்டும்.

டிரஸ்சிங் ரேபிளை அறையின் வடமேற்கு மற்றும் வட கிழக்கு மூலைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் வடக்குப்பார்த்து உபயோகிப்பது போல் அமைப்பது சிறப்பு.பொதுவாக நாம் அமரும் போது அதிக நேரம் வடக்கு அல்லது கிழக்கு திசையை நோக்குவது போல் நாற்காலிகளை அமைக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். ஏனெனில் இத்திசைகளை நோக்கி செயற்படும் போது ஞாபக சக்தி, சுறுசுறுப்பு ஆகியவை அதிகமாக இருக்கும்.

படுக்கை அறையில் சோபா, நாற்காலிகள் போன்றவற்றை அமைக்க விரும்புபவர்கள் கிழக்கு அல்லது வடக்கு திசையை நோக்கி அமருமாறு அமைத்துக் கொள்ளலாம். சோபா மற்றும் நாற்காலிகளை அமைக்கும் இடம் மூலைகளில் இல்லாமல் மூலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இருக்க வேண்டும்.

பொதுவாக தென்மேற்கு மூலை படிப்பதற்கு உகந்த இடமல்ல. ஆனால் பலர் படுக்கையறையில் கணிப்பொறியை உபயோகிப்பதற்கும், எழுதப் படிப்பதற்கும் மேசை மற்றும் நாற்காலிகளை அமைக்க விரும்புகிறார்கள். படிக்கும் அறை தனியாக அமைக்க இயலாத நிலையில் சிறிது நேரம் மட்டும் எழுதவோ, படிக்கவோ கணிப்பொறியை உபயோகிக்கவோ வேண்டியிருந்தால் அவ்வசதியை இப்படுக்கை அறையில் ஏற்புடுத்திக் கொள்ளலாம்.


ஆனால் படிப்பதற்கு அதிக நேரம் இவ்விடத்தை உபயோகிக்க வேண்டியிருந்தால் அவ்வமைப்பை தவிர்ப்பது மிகவும் அவசியம். இதேபோல் தொழில், கல்வி, குடும்பம் போன்றவற்றை குறித்து முக்கியமான முடிவுகளை இவ்விடத்திலிருந்து ஆலோசிக்க கூடாது. மேலும் தொலைக்காட்சிப்பெட்டி, சோபாக்கள், குளிர்சாதனப்பெட்டி போன்ற பல வசதிகளை இவ்வறையில் ஏற்படுத்தினாலும் இவற்றை நீண்ட நேரம் பயன்படுத்தக்கூடாது.

படுக்கை அறையில் படிக்கும் வசதியை ஏற்படுத்த அதற்குரிய மேசை மற்றும் நாற்காலியையும் வடக்கு அல்லது கிழக்கு திசை பார்த்து உபயோகிப்பது போல அமைக்க வேண்டும். இவற்றையும் மூலைகளை தவிர்த்து மூலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைப்பதே சிறப்பு.

**மூலைகளை ஏன் தவிர்க்க வேண்டும்?** என்ற கேள்வி வாகசர்களுக்கிடையே எழலாம். ஒவ்வொரு மூலைக்கும் ஒவ்வொரு தன்மையுண்டு. அது கட்டடத்தின் மூலையாக இருந்தாலும் சரி, அறையின் மூலையாக இருந்தாலும் சரி அறையின் மூலையாக இருக்கும் பட்சத்தில் அதன் தன்மை கட்டடத்தின் மூலையை விட குறைவாக இருக்கும்.

ஈசானிய மூலையில் கதவை அமைக்க வேண்டியிருக்கும் என்பதால் அங்கு எடை எதுவுமின்றி காலியாக இருக்க வேண்டும் என்பதாலும் இம்மூலையில் சோபா மற்றும் நாற்காலிகளை அமைக்கக்கூடாது. கன்னி மூலையில் பீரோ மற்றும் கட்டிலை அமைக்க வேண்டியிருப்பதாலும் இம்மூலையை உபயோகிக்கும் போது ஞாபகசக்தி, சுறுசுறுப்பு ஆகியவை குறைவாக இருப்பதாலும் உறங்கும்போது மட்டும் இம்மூலையை பயன்படுத்த வேண்டும். அக்னிமூலையை உபயோகிப்பது மன அழுத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தும் என்பதால் இதைத் தவிர்ப்பது நல்லது.

வாயுமூலையை உபயோகிப்பது ஓய்வற்ற உணர்வையும் கவனச் சிதைவையும் ஏற்படுத்தும் என்பதால் இம்மூலையை தவிர்ப்பது அவசியம். படிப்பதற்குரிய மேசை மற்றும் நாற்காலியை ஏனைய நாற்காலிகளைப் போல் இல்லாமல் சுவற்றுடன் இணைத்து வட சுவற்றின் மையப்பகுதியிலோ, கிழக்கு சுவற்றின் மையப்பகுதியிலோ அமைத்துக்கொள்ளலாம். இவ்வாறு அமைப்




பது அதிக இட வசதியை ஏற்படுத்துவதுடன் படிப்பவரின் கவனம் சிதறாமல் இருக்கவும் வழி வகுக்கும்.

கணிப்பொறியை உபயோகிக்க விரும்புவர்களும் படிப்பதற்குரிய மேசை மற்றும் நாற்காலியை அமைக்கும் இடத்திலே சுவருடன் இணைத்து அமைத்துக் கொள்ளலாம். தொலைக்காட்சிப்பெட்டியை படுக்கையறையில் அமைக்க வேண்டுமானால் தென்கிழக்கு மூலையிலோ , தென்கிழக்கு மற்றும் வடகிழக்கு மூலைகளுக்கு இடைப்பட்ட பகுதியிலோ அமைக்கலாம்.

இரண்டாவது பட்சமாக வடமேற்கு மூலையிலோ, வடமேற்கு மற்றும் வட கிழக்கு மூலைகளுக்கு இடைப்பட்ட பகுதியிலோ அமைத்துக்கொள்ளலாம்.

குளிர்சாதனப்பெட்டியை வடமேற்கு மூலையிலோ , இம்மூலைக்கு அருகாமையிலோ அமைத்துக்கொள்ளலாம். பொதுவாக பரண் அமைப்பதாக இருந்தால் அதை அறையின் மேற்கு மற்றும் தெற்குப் பக்கங்களில் அமைக்கலாம். ஆனால் பரண் அமைப்பது படுக்கையறையின் அழகை குறைக்கக்கூடிய விடயம் என்பதால் முடிந்தவரை பரண் அமைப்பதை தவிர்ப்பது நல்லது.

சுவற்றுக்குள் கூண்டு ஏற்படுத்தி அமைக்கப்படும் கார்ப்போர்டுகளுக்கு மேல் இதே அளவில் பரணையும் அமைத்துக்கொள்ளலாம். இவ்வாறு அமைக்கப்படும் பரண்கள் அத்திசை முழுவதும் அமையாமல் கார்ப்போட் அளவுடன் முடிவதால் நல்ல வடிவமைப்பை பெறும். கார்ப்போட்டை போலவே இவற்றுக்கும் ஒரே சீராக மைக்கா அல்லது மரவேலைப்பாடுகளை செய்து கொள்ளலாம். படுக்கை அறையின் கதவிற்கு நேர் எதிராக நீளவாக்கிலோ, கட்டிலுக்கு மேலோ பரணை அமைப்பது அவ்வளவு சிறப்பாக இருக்காது.

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக துணிந்து குரல் கொடுத்தவர் மன்னார் ஆயர்

## அவர் மீதான அச்சுறுத்தலை வன்மையாக கண்டிக்கின்றோம்

(கொழும்பு)

மதங்களைக் கடந்து மனித நேயத்தின் பால் மக்களின் நீதிக்காக குரல் கொடுத்து வரும் மன்னார் மறை மாவட்ட ஆயர் மீது இலங்கை அரசாங்கத்தினால் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஏற்படுத்தப்பட்டு வரும் தொடர் அச்சுறுத்தல்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இந்த ஒன்று கூடலுக்கு வலுவூட்டும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தமிழீழத் தாயக உறவுகளுக்கு சிற்றலையூடான வானோசை ஒலிபரப்பின் ஊடாக விடுத்த செய்தியின் விபரம் வருமாறு,

### நாடு கடந்த அரசு அறிக்கை

இலங்கையிலும் தமிழர் தாயகத்திலும் இராணுவ மேலாதிக்க ஆட்சி அதிகாரத்தின் கீழ் சுதந்திரமாக கருத்துக்களை கூறுவதற்கும் உண்மைகளினை வெளிப்படுத்துவதற்கும் அரசியில் அபிலாசகைளை கொண்டிழுப்பதற்கும் அரசியல் அகற்றப்பட்டுள்ள இன்றைய சூழலில் மன்னாரில் முன்னெடுக்கப்படும் சாத்வீக வழிப்போராட்டங்களுக்கு உலகெங்கும் சிதறிவாழும் தமிழர்கள் யாவரும் தங்கள் ஆதரவினை தெரிவித்துக்கொள்கின்றனர்.

போர் இடம்பெற்ற காலங்களிலும் தொடர்ந்து மனித நேய நெருக்கடி மிகுந்த கட்டங்களிலும் மிகுந்த துணிச்சலுடன் கிறிஸ்தவ மத விழுமியங்களுடன் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை குரல் கொடுத்தவர். இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழு முன்பாக அப்பாவி தமிழ் மக்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி வேண்டி சாட்சியம் அளித்தவர்.

அந்த ஒரே காரணத்தினை முன் வைத்து அவரின் தனித்துவத்தினையும் நன் மதிப்பினையும் புறந்தள்ளி புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு உட்பட்டுத்துவதிலும் பாராளுமன்றத்தில் பொறுப்பற்று விமர்சிப்பதும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளாகும்.இத்தகைய செயல்கள் யாவற்றினையும் எமது அரசாங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

தமிழர் தாயகத்தினுள்ளும் இலங்கையிலும் இந்து, இஸ்லாமிய மத சுதந்திரத்துக்கும் வழிபாட்டு உரிமைகளுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விட்டுபட்டுள்ள சிங்கள, பௌத்த இனவாதிகளின் செயல்களுக்கு எதிராக எமது அரசாங்கம் புதிய போர்க்களம் தமிழர் வாழும் தேசங்கள் என்ற அடிப்படையில் உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வுப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொலன்னறுவை சிவன், விஷ்ணு ஆலயங்களில் 30 புராதன தமிழ் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

இதேவேளை இவ்வாலயத்திற்கு அருகில் உள்ள வளாகத்தில் விஷ்ணு ஆலயம் அமைந்துள்ளது. நுழை வாசற்படியின் கீழ் உள்ள கண்டத்தில் தெளிவாக சாசனம் தெரிகிறது இதே போல் மூலஸ்தான படியிலும் கல் வெட்டு காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தூண்கள் பலவற்றில் கல் வெட்டுக்கள் அமைந்துள்ளன. இதற்கு மேலாக மூலஸ்தானத்தில் நாற்சதுர வடிவான தூண்களைக் கொண்டு வந்து அமைத்துள்ளனர். இவற்றில் மேலுள்ள கற்களில் தெளிவான சாசனம் காணப்படுகின்றன.

ஆனால், இக்கோயில் சிங்களத்தில் *நாகபடை விகாரை* அதாவது *நய்பன விகார* என அழைக்கப்பட்டது. இக்கோயிலை அகழ்வு செய்த காலத்தில் மேடைப் புற்றுகள் இருந்திருக்கலாம். நாகபாம்பு இருந்திருக்கலாம். இதனை பார்த்த அம்மக்கள் இதனை நாகபடை விகாரை என்று அழைக்கின்றனர்.

இது ஒருவருக்கும் தெரியாத விடயம். இவ்விரு ஆலயங்களிலும் சாசனங்கள், 20 இற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. வளாகத்தை சுற்றிப் பார்த்தபோது துண்டம் துண்டமாக கற்கள் காணப்படுகின்றன. இவற்றில் எழுத்துக்கள் தெரிகின்றன.

பொலன்னறுவையிலிருந்து ஹிங்குராங்கொட பாதையில் 2 கி.மீ. தொலைவில் இந்தகோயில் அமைந்துள்ளது. எதிர்ப்புறத்திலே ஒரு கற்தடியான கோயிலின் எஞ்சிய

**க. கோகிலவாணி**

பாகங்கள் காணப்படுகின்றன. இது தான் மூன்றாம் சிவாலயம் என்று கூறப்படுகின்றது. இது ஏறக்குறைய 52 அடி நீளமான சிறிய கோவில் 4 அடி உயர அடித் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அடித்தளத்தில் உபானம், யகரி, குமுதம், கண்டம், கபோதம் என்ற 5 படைகள் உள்ளன.

இந்த ஆலயத்தில் சாசனம் இருக்குமென்று நம்பிக்கையில்லை. ஏனெனில், பல நூற்றாண்டுகளாக மண்ணில் புதைந்து கிடந்ததால், எழுத்துக்கள் கற்புலனுக்கு தெரியாத வகையில் மறைந்துவிட்டிருக்கும். இந்த ஆலயத்தின் அதிர்ஷ்டதானம் மூலஸ் தானம் முதல் வாசற்படி வரை ஒரேமட்டத்தில் உள்ளது. அந்த அதிர்ஷ்டதானத்தில்தான் ஆலயத்தின் அனைத்து பகுதிகளும் உள்ளன. அதிர்ஷ்டதானத்தின் 3 பக்கங்களும் எழுத்துக்கள் பல வரிகளில் உள்ளன. அதில் என்ன இருக்கின்றது என்பதுதான் தற்போதைய பிரச்சினை. தமிழ் எழுத்துக்கள், மிகச்சிறிய எழுத்துக்கள் என காணப்படுகின்றன.



பேராசிரியர் சி. பத்மநாதன்

இந்த ஆலயத்தின் வாசற்படியில் ஒருசிறிய சாசனம் உள்ளது. இது ஆலயத்தின் பெயராக அல்லது உபயகாரரின் பெயராக இருக்கலாம் அதே போல் வாசற் கதவின் மேல் உள்ள உத்திரத்தில் இருவரிகளில் சாசனம் காணப்படுகின்றது. இவற்றோடு, தெற்கு பக்கத்தில் விழுந்து கிடக்கின்ற பெரும் கற்பாலங்களிலும் எழுத்துக்கள் தெரிகின்றன.



கடந்த ஞாயிற்றுக் கிழமை மேற் கொண்ட எமது பொலன்னறுவை பிரயாணத்தில்தான் இவற்றை கண்டறியும் வாய்ப்பு எமக்கு கிட்டியது.

இதுவரை அடையாளம் காணப் படாத 30 வரையான தமிழ் சாசனங்கள், சமீபத்தில் உள்ள 3 ஆலயங்களிலும் உள்ளன.

தொல்பொருள் சின்னங்கள் எல்லாம் சட்டப்படி தொல்லியல் திணைக்களத்தினுடைய மேற்பார்வையில் அமைந்தவை. நாட்டின் எந்த பகுதியாயினும், இவற்றைப் படி யெடுப்பதற்கு, ஆராய்வதற்கு அவர்களுடைய அனுமதியை, அனுசரணையைப் பெறவேண்டும். அது அவ்வளவு சிரமமானதன்று. இதைவிட சாசனவியலுக்கு பொறுப்பானவர் தன்னை நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

**அங்கு வேறு விநோதங்கள் உள்ளன. மூன்று வேறு காலங்களுக்குரிய கல்வெட்டுக்கள் ஒரே கல்லில் அமைந்திருக்கின்றன. அவர்கள் தந்தது 3 படிகள்.** அவை ஒவ்வொன்றி லும் 15 ஆம் நூற்றாண்டுக்குரிய பெரிய எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதல் 11 ஆம் நூற்றாண்டில் எழுதிய நீளமான சாசனங்களில் நெடுந் தீவில் உள்ள பௌத்த பள்ளியான ஜனநாத பெரும்பள்ளி என எழுதப்பட்டுள்ளது. அதில் வஜ் ஜிர தேவர், மித்திரதேவர் என்ற பெயர்கள் தெரிகின்றன.

இதுமட்டு மல்ல, கிரீஸ்துக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் பிராமி சாசனம் அதிலே எழுதப்பட்டுள்ளது. இவைகளெல்லாவற்றையும் ஆராயும்போது இலங்கையினுடைய பூர்வகாலத்து, மத்திய காலத்து வரலாறு, சமய வரலாறு, சமூக வரலாறு இவற்றைப் பற்றி இதுவரைஅறிந்திராத விடயங்களை அறிந்து கொள்ளலாம். இலங்கையின் பிரித்தானிய காலத்துக்கு முற்பட்ட கால வரலாறுகளை அறிய வேண்டுமானால் மூன்று மொழிகளிலும் உள்ள ஆவணங்களை ஒப்பிட்டுப் படிக்க வேண்டும்.



இலக்கியங்களில் பிரதானமானது மஹாவம்சம். பொலன்னறுவை காலத்தை பொறுத்தவரை அது ஆதார பூர்வமாகவும் மிக விரி வாகவும் குறிப்பிடுகின்றது. பொலன்னறுவை காலத்தில் சிங்கள மொழியில் கூடிய சாசனங்களை வெளியிட்டவர் நிஷங்க மல்லன் என்ற விடயங்கள் இந்த மஹாவம்சத்தில் கூறப்படுகின்றது.

பொலன்னறுவைக் காலத்தில் தான் மிகக் கூடுதலான தமிழ் சாசனங்களும் வெளிவந்தன. இதுவரை காலமும் திருகோணமலை மாவட்டத்தில்தான் தமிழ் சாசனங்களில் செறிவு கூடுதலாக காணப்பட்டதாக கருத்து நிலவியது. அடையாளம் கண்ட சாசனங்களை படித்து விளங்கிக் கொள்ளும் இடத்து, இராசதானியாகிய பொலன்னறுவையில் தான் கூடுதலான தமிழ் சாசனங்கள் இருந்திருக்க வேண்டும் கருதப்பட இடமுண்டு.

இதேவேளை தமிழ் கல்வெட்டுக்களை இலங்கையில் வாசிக்கக் கூ டியவர்கள் இருக்கின்றார்களா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பேராசிரியர் பதிலளிக் கையில், இலங்கையில் இந்திரபால, வேலுப்பிள்ளை என்ற இருவரும் தமிழ் கல்வெட்டுக்களை வாசி த்து இரு நூல்களை வெளியிட்டுள்ளனர். இருவரும் தனித்தனியாக மற்ற வர்களோடு கலந்தாலோசிக்காமல் வெளியிட்டதால் அவற்றினுடைய வாசகங்களிலே சில தவறுகள் ஏற்பட்டன. சுபராவை அழைத்துக்கொண்டு வந்துதான் நாங்கள் இவற்றை படித்தோம். யாழ்ப்பாணத்தில், கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தில் இதனை போதிக்கின்றார்கள். ஆனால், மாணவர்கள் இதனை வாசிப்பார்களா என்பது தெரியவில்லை. சாசனத் துறையில் பயிற்சிபெற்ற வல்லுநர்களை வரவழைத்துத்தான் இறுதியான வடிவங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

(முற்றும்)

# ஊழியர் சேமலாப நிதியின் முதலீடு தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிட முடிவு

## தலைவர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

4 பில்லியன் ரூபா வரையில் நட்டத்தை ஏற்படுத்திய ஊழியர் சேமலாப நிதியின் பங்குச்சந்தை முதலீட்டை பற்றி அனைத்து கம்பனி ஊழியர் சங்கம் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவிடம் ஒரு முறைப்பாட்டை தாக்கல் செய்யவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. இதனால் இந்த மாதிரியான முதலீட்டுக்கான காரணங்களை அறிய ஏனையோர் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டனை வழங்கப்படுவதை உறுதி செய்யவும் இது தேவையாக உள்ளது என சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க கூறியுள்ளார்.

தனியார் துறையில் உள்ள ஊழியர்களின் பணத்தை முதலீடு செய்யும் ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளில் ஊழல் கள் காணப்படுகின்றன. இதேபோக்கு தொடருமாயின் தனியார் துறை ஊழியர்கள் வட்டியை மட்டுமன்றி முதலீட்டின் கணிசமான பகுதியையும் இழக்க நேரிடும் என அவர் கூறியுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியம் பங்குச்சந்தையில் 7.2 பில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. ஊழியர் சேமலாப நிதியம் 2010 இல் 32.5 ரூபா விலையில் வாங்கிய கலதாரி ஹோட்டலின் பங்குகளின் விலை தற்போது 17 ரூபாவாக வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த 6 மாதங்களில் மட்டும் ஊழியர் சேமலாப நிதியம் 1.3 பில்லியன் ரூபாவை பங்குச்சந்தை முதலீடுகள் மூலம் இழந்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியில் உள்ள பணம் அரசாங்கத்தின் பணம் அல்ல. அது மக்களின் பணம். சட்டவிதிகளை அனுசரிக்காமல் வெளிப்படைத்தன்மை இல்லாமல் அதை நிர்வகிப்பவர்கள் யாரும் இதைப் பயன்படுத்த முடியாது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2011 அறிக்கை இன்னும் வெளியாகவில்லை. இது விரைவில் வெளியிடப்படாவிட்டால் சங்கங்கள் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கும் என அவர் கூறினார்.

(அ-2)

## கரம்பொன் அன்னை வேளாங்கன்னி திருவிழா

(யாழ்ப்பாணம்)

கரம்பொன் அன்னை வேளாங்கன்னி யாத்திரைத் தல திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது .

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு திருச் செபமாலை நடைபெற்று ஆயத்த நாள் வழிபாடுகள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழா வழிபாடுகள் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு திருவிழா திருப்பலி இடம்பெறும்.

(அ-2)

# சிறுவர் மீதான வன்முறைகளை தடுக்க கிராம மட்டத்தில் விழிப்புணர்வு தேவை

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைக்கு சிறுவர்களுக்கு சமூகம் உரிய இடத்தை கொடுக்கத் தவறியமை, சிறுவர்கள் மீதான குறைந்த சமூக செலவு, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக பாதுகாப்பு ஏற்பாடுகளின் போதாமை என்பன கரரணங்களாக அமைவதாக சிறுவர் நலன் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இப்போக்கு அதிகரிப்பதற்கு உலகளாவிய பொருளாதார நெருக்கடிகள் வழிவகுத்துள்ளதாகவும் அவர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு காணும் தென்ஆசிய முன்னெடுப்புகளின் பிராந்திய கூட்டத்தொடர் நிகழ்வு ஒன்றில் பேசிய போதே அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

சிறுவர் மீதான வன்முறைக்கு எதிராக பலமான கருத்தொருமைப்பாடு காணப்படினும் வன்முறையின் சில வடிவங்கள் இன்னும் தொடர்வதோடு அவை சமூகத்தினால் ஏற்கப்படுவனவாகவும் உள்ளன என அமைச்சர் கூறினார்.

அரசாங்கத்தாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நடத்தப்படும் விழிப்புணர்வு பிரசாரங்கள் அநேகமாக நகரங்களுக்குள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அடிமட்ட மக்களை இந்த செய்திகள் சென்றடையும் வகையில் செயற்பட வேண்டும் என அமைச்சர் மேலும் கூறினார்.

(அ-2)

# பாரதி விழாவில் பங்கேற்க வேண்டாம்; தமிழறிஞர்களுக்கு வைகோ வேண்டுகோள்

(சென்னை)

கொழும்பில் நடக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள பாரதி விழாவில் பங்கேற்க வேண்டாம் என தமிழறிஞர்களுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை, கொழும்பு தமிழ்ச்சங்கமும் சென்னை பாரதி சங்கமும் இணைந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவச் செய்வோம் என்ற தலைப்பில் பாரதி விழா நடத்தவுள்ளது.

அதில் தமிழகத்தில் இருந்து பேராசிரியர்களும் சொற்பொழிவாளர்களும் கலந்து கொள்ள இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

தமிழர் தாயகத்தில் சிங்கள மற்றும் பௌத்த மயமாக்கல் வேகமாக நடந்து வருகிறது. தமிழர்கள் வாழும் இடங்களில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் வழிபாட்டுத்தலங்களும் திருவள்ளுவர் உள்ளிட்ட தமிழறிஞர்களின் சிலைகளும் உடைக்கப்பட்டு வருகின்றன.

ஈழத்தமிழர் படுகொலை குறித்த உண்மைகளை மறைப்பதற்காக இதுபோன்ற விழாக்களை இலங்கை அரசும் இந்திய அரசும் நடத்தி வருகின்றன.

இவ்விழாவில் இந்தியத் தூதரகத்தின் முதன்மை செயலர் ஜஸ்டின் மோகன் பங்கேற்க இருப்பதாக தெரிகிறது. எனவே, இவ்விழாவில் தமிழகத்திலிருந்து யாரும் பங்கேற்க வேண்டாம் என வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(அ-2)

# புலம்பெயர் தமிழர்கள் அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்

## இரா.சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

புலம்பெயர் சமூகம் உள்நாட்டு அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மன தைரியத்துடன் உள்நாட்டு தமிழ் அரசியல்வாதிகள் எடுக்கும் தீர்மானங்களை புலம்பெயர் சமூகம் மதிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் சமூகத்தின் கருத்துக்கள் இலங்கை வாழ் தமிழர்களுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமையக் கூடாது.

வெளிநாடுகளில் வாழும் சில தரப்பினர் இலங்கை தமிழ் மக்கள் முற்றுமுழுதாக தோற்கடிக்கப்பட்டு விட்டதாகவே கருதுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

தாயகத்தில் வாழும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் புலம்பெயர் மக்களின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். இதேவேளை, 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாக கருதப்படமுடியாது.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய காத்திரமான தீர்வுத்திட்டம் ஒன்றின் அவசியம் எழுந்துள்ளது.

சுய மரியாதையுடன் வாழக்கூடிய சகல அதிகாரங்களும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)


# முள்ளியவளையில் கணனிப்பயிற்சி

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையில் கணனி பயிற்சி நெறிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முள்ளியவளை கணனி பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என பயிற்சி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் ஜி.ரி.ரத்னகுமார் அறிவித்துள்ளார்.

மேலும் மோட்டார்சைக்கிள் பொறியியல், டீசல் இயந்திரப் பொறியியல், படகு வெளியிணைப்பு இயந்திர பொறியியல், முச்சக்கரவண்டி பொறியியல், தன்னியக்க வாகனம் நிறம் தீட்டுநர், தன்னியக்க வாகன தகரவேலையாள், உருக்கிணைப்பாளர் என்னும் துறைகளுக்குரிய என்.வி.கியூ (NVQ) பரீட்சைகளும் நடத்தப்படுகின்றன.

அத்துடன் இவை தவிர்ந்த ஏனைய என்.வி.கியூ (NVQ) தொழில்களுக்கு பரீட்சை நடத்தப்படுவதற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(அ-7)




யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் கணிதப்பாசறை நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கணித பாட ஆசிரிய ஆலோசகர் க.விஜயகுமார் நாடாவெட்டி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கோப்பாய் செய்தியாளர்)



# சிறுவர் அரங்கம்

116

## ராணியும் வேலைக்காரியும்



வைசாலி நகரில் ஹீரா என்ற பணக்கார வியாபாரிக்குப் பல ஆண்டுகளாக குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருந்து, இறுதியில் அவர் நாற்பது வயதை எட்டிய போது ஒரு பெண் குழந்தை பிறந்தது. பல ஆண்டுகள் கழித்துப் பிறந்த குழந்தையை ஹீரா கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தார். ஒருநாள் அவர் குழந்தையுடன் தனது மாளிகைத் தோட்டத்தில் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார். குழந்தையைப் புல் தரையின் மீது ஒரு பட்டுத்துணியை விரித்து அதன் மீது கிடத்தியிருந்தார். அந்த சமயம் வானில்


## அம்புலி மாமா கதைகள்

பறந்து வந்த ஒரு இராட்சசக் கழுகு குழந்தையை தன் கால்களால் பற்றிக் கொண்டு வானில் பறந்து சென்று விட்டது. ஐயோ! என் குழந்தை! என் குழந்தை!! என்று அலறிய ஹீரா தன் ஆட்களைக் கூவி அழைத்தார். ஆனால் குழந்தையை அலேக்காகத் தூக்கிக் கொண்டு வானில் பறந்து விட்ட கழுகை யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. உண்மையில், அது சாதாரணக் கழுகல்ல! அது பூர்வ ஜென்மத்தில் ஒரு யட்சணியாக இருந்தது. ஒரு முனிவர் இட்ட சாபத்தினால் அது கழுகாக மாறியது. மீண்டும் சுய உருவம் அடைய அதற்குப் பல ஆண்டுகள் ஆகும் என்று முனிவர் கூறியிருந்தார். வானில் பறந்து வந்த யட்சணிக் கழுகு, ஹீராவின் அழகான பெண் குழந்தையைக் கண்டதும் அதைத் தான் எடுத்து வளர்க்க விரு



ம்பியது. ஆகையால் அது குழந்தையைத் தூக்கிக் கொண்டு தான் வசித்து வந்த காட்டினை அடைந்தது. குழந்தைக்கு சகுந்தலா என்று பெயரிட்ட கழுகு அதை மிகுந்த பாசத்துடன் வளர்த்தது. குழந்தை சிறுமியான பின்னர்,தானே குருவாக இருந்து அவளுக்கும் பல விடயங்களை கற்பித்தது.


பல கலைகளிலும் அவளை வல்லவளாக்கியது. கழுகின் அரவணைப்பில் வளர்ந்த சகுந்தலா சில ஆண்டுகளில் அழகான மங்கையாக மாறினாள். ஒரு நாள் அது சகுந்தலாவிடம், மகளே! முன்னமே கூறியது போல் நான் ஒரு யட்சணி. என்னுடைய சாபம் இன்னும் சில நாட்களில் தீர்ந்து நான் சுய உருவம் பெற்று யட்சலோகம் சென்று விடுவேன். மானிடப் பெண்ணான உன்னை நான் அழைத்துச் செல்ல முடியாது. ஆகவே, இனி நீ உன் சொந்த தாய், தகப்பனிடம் போய் சேர்ந்து விடு! என்றது. சில நாட்களிலேயே கழுகு யட்சணியாக மாறி தன்னுடைய உலகத்திற்கு சென்று விட்டது. சகுந்தலா கழுகிடம் பிரியாவிடை பெற்றபின் தன் பிறந்த இட



மான வைசாலி நகரை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். செல்லும் வழியில் ஒரு அடர்ந்த காடு குறுக்கிட்டது.காட்டின் நடுவே ஒரு அரண்மனையைக் கண்டதும் அவள் ஆச்சரியமடைந்தாள்.

ஆர்வம் மேலிட, அவள் அந்த அரண்மனைக்குள் நுழைந்தாள். அங்கு அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். பல ஆண்டுகளாக அவர்கள் ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்து கட்டைகளாகக் கிடந்தனர் என்று அவளுக்குப் புரிந்தது. அரண்மனையின் படுக்கை அறையில் அவள் நுழைந்த போது அங்கு மிக அழகான இளவரசன் ஒருவனும் மயங்கிக் கிடந்தான். படுக்கையறையில் அவனுடைய ஓவியம் ஒன்று வரையப்பட்டிருந்தது. அந்த ஓவியத்தில், இளவரசன் ஒரு நகை அணிந்து காணப்பட்டான். ஆனால் மஞ்சத்தில் மயங்கி இருந்த இளவரசன் கழுத்தில் அந்த நகை காணப்படவில்லை. அந்த நகைக்கும், இளவரசன் மயங்கி இருப்பதற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக அவள் உணர்ந்தாள். அவனுடைய காலடியில் ஒரு பெட்டியில் அந்த நகை காணப்பட்டது. ஏதோ ஓர் உள்ளுணர்வால் தூண்டப்பட்ட அவள், அந்த நகையை எடுத்து அவனுடைய கழுத்தில் அணிவித்தாள். உடனே இளவரசன் மயக்கத்திலிருந்து விடுபடலானான். அப்போதுதான் சகுந்தலாவிற்குத் தன்னைப் பற்றிய உணர்வு வந்தது. காட்டிலேயே வாழ்ந்ததனால் அவள் எளிய உடை அணிந்திருந்தாள். இளவரசன் முன் அந்த ஆடையில் தோன்ற விரும்பாமல் அங்கிருந்த நல்ல ஒரு ஆடையை எடுத்துக் கொண்டு நந்தவனத்திலிருந்த ஓடையில் குளிக்கச் சென்றாள். நகையை இளவரசன் கழுத்தில் இருந்து அகற்றிப் பெட்டியில் வைத்த பின்னரே அவள் குளிக்கச் சென்றாள். அவள் குளித்துக் கொண்டிருக்கையில் அங்கு ஒரு விகாரமான உருவம் கொண்ட கூனி அழுது கொண்டே சென்றாள்.

அவளை அழைத்த சகுந்தலா அவள் அழுவதற்கான காரணத்தைக் கேட்டாள். தான் விகாரமான கூனியாக இருப்பதால் தன் கணவன் தன்னைப் புறக்கணித்து விட்டார் என்றும், தான் அதனால் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும் கூறினாள். அவளை சமாதானப்படுத்திய சகுந்தலா அவளை அரண்மனைக்குச் செல்லுமாறும், தான் சற்று நேரத்தில் அங்கே வருவதாகவும், அவளுடைய வசதியான வாழ்க்கைக்கு தான் உதவி செய்வதாகவும் கூறினாள். கூனி அவ்வாறே அரண்மனைக்குச் சென்றாள். ஒவ்வோர் அறையாக ஆராய்ந்த பின், இளவரசன் அறையை அடைந்தாள். சகுந்தலாவிற்குத் தோன்றியது போல அவளுக்கும் தோன்ற உடனே அவள் அந்த நகையை எடுத்து இளவரசனின் கழுத்தில் அணிவித்தாள். மயக்கத்தில் இருந்து விடுபட்ட இளவரசனிடம் கூனி தான் ஒரு ராஜகுமாரி என்றும் அவனை மயக்கத்திலிருந்து மீட்டது தான் என்றும் கூற, இளவரசனும் அதை நம்பிவிட்டான். அதற்குள் அரண்மனையிலிருந்த அனைவரும் மயக்கத்திலிருந்து மீண்டனர். சகுந்தலா குளித்து விட்டு அரண்மனைக்குள் நுழைந்து, இளவ



ரசனின் அறையை அடைந்த போது அங்கு ஏற்கனவே இருந்த கூனி, சகுந்தலாவை இளவரசனிடம் காட்டி, அதோ! அவள் தான் என் வேலைக்காரி! என்றாள். கோபமுற்ற சகுந்தலா கூனியைத்திட்டினாள். பின்னர் இளவரசனிடம் உண்மையை எடுத்துரைத்தாள். ஆனால் கூனிதான் சொல்வதுதான் உண்மை என்று சாதித்தாள். அவர்கள் இருவரில் யார் கூறுவது உண்மை என்று இளவரசனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதற்குள் சகுந்தலா, இளவரசரே! கடவுள் முன் சீட்டு எழுதிப் போடுகிறேன். சில சீட்டுக்களில் சகுந்தலா ராஜகுமாரி என்றும் சில சீட்டுக்களில் சகுந்தலா வேலைக்காரி என்றும் எழுதியிருக்கும். பின்னர், கண்களை மூடிக்கொண்டு அதில் சீட்டுக்களை எடுப்பேன். அவற்றில் எல்லாம் சகுந்தலா ராஜகுமாரி என்று எழுதப்பட்டிருக்கும். அப்படி நிகழ்ந்தால் நான்தான் ராஜகுமாரி என்று ஒப்புக் கொள்வீர்களா? என்று கேட்டதும், இளவரசன் ஒப்புக்கொண்டான். அதன் படியே, பல சீட்டுக்களைத் தயாரித்த சகுந்தலா அம்மன் படத்திற்கு முன் அவற்றை வைத்து தன் கண்களை மூடிக் கொண்டு அவற்றில் பாதியை பொறுக்கினாள். அவை யாவற்றிலும் சகுந்தலா ராஜகுமாரி என்றே எழுதப்பட்டிருந்தது. ஆகையால் இளவரசன் சகுந்தலா கூறியதை ஒப்புக் கொண்டு, கூனியை விரட்டி விட்டான். சகுந்தலாவை இளவரசன் திருமணம் செய்து கொண்டான். திருமணத்தின் போது வந்த விருந்தினர்களில் சகுந்தலா தன் தந்தை ஹீராவைச் சந்தித்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள்.

திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்தது. ஆனால் சகுந்தலாவின் தந்தை ஹீரா சீட்டுக்குலுக்கலில் தன் மகள் ஏதோ சாமர்த்தியமாகச் செய்து தான் நினைத்தைத் சாதித்திருக்கிறாள் என்று தோன்றியது. அவர் சகுந்தலாவைத் தனிமையில் விசாரித்தபோது அவள் ஆம் அதில் என் சாமர்த்தியம் அடங்கியுள்ளது. நான் நான்கு காகிதங்களை எடுத்துக் கொண்டேன். ஒவ்வொன்றையும் மூன்றாக மடித்தேன். மேல் மடிப்பிலும், கீழ் மடிப்பிலும் சகுந்தலா வேலைக்காரி என்று எழுதிய பின், நடு மடிப்பில் சகுந்தலா ராஜகுமாரி என்று எழுதி விட்டேன். பின்னர் அவற்றை மூன்றாகக் கிழித்தேன். மேல் மடிப்பிலும், கீழ் மடிப்பிலும் ஒரு பக்கம் மட்டுமே கிழித்திருந்ததால், அந்தப் பக்கம் சொறசொறப்பாக இருக்கும். நடு மடிப்பில் இரண்டு பக்கமும்கிழிக்கப்பட்டதால் இரண்டு பக்கமும் சொறசொறப்பாக இருக்கும். கண்களை மூடிக் கொண்டு சீட்டுக்களை எடுக்கையில், இரு பக்கமும் சொற சொறப்பாக இருக்கும். நான்கு சீட்டுக்களை மட்டும் பொறுக்கி எடுத்தேன். விரல்களால் தடவிப் பார்த்தே அது தெரிந்து விட்டது. அவற்றில் சகுந்தலா ராஜகுமாரி என்று எழுதப்பட்டிருந்தது. இதுதான் எனது வெற்றியின் இரகசியம்! என்றாள்.

# உள்நாட்டு உற்பத்தியில் வருமான வீதத்தை அதிகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் டியூ. குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

**மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்கத்தின் வருமான வீதத்தை அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்களை அரசு முன் னெடுத்திருப்பதாக மனித வளங்கள் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார். இதன் ஒரு அங்கமாக வட மாகாண அரச நிர்வாக அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்டுத்தும் செயல மர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.**

யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான அரச நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான பாராளுமன்ற சட்டவாக்கங்கள் பற்றிய இரண்டு நாள் செயலமர்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

1977 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்கத்தின் வருமானம் 24 வீதமாகக் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றங்களில் இந்த வருமான வீதம் குறைவடைந்து 2009 ஆம் ஆண்டு 13 வீதமாகக் காணப்பட்டது.

எனினும் கடந்த வருடம் அரசாங்கத்தின் வருமான வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5 வீதமாக அதிகரித்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்கத்தின் வருமானம் 20 சதவீதத்தால் அதிகரித்தால்தான் சாதாரண மக்கள் பாதிப்படைய மாட்டார்கள்.

அர்சாங்கம் பாராளுமன்றத்தின் ஊடாக ஒதுக்கும் நிதிகள் மக் களுக்கு சென்றடையச் செய்பவர்கள் என்ற ரீதியில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு இவ் விடயத்தில் பாரிய பங்க ளிப்பு உண்டு.

எனவேதான் பாராளுமன்ற விவகார அமைச்சு வடமாகாணத்தைச் சேர்ந்த அரச நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு இந்த செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அமைச்சுக்களால் ஒதுக்கப்படும் நிதி வீண்விரயமாகாமல் சென்றடைவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு உண்டு.

பொது மக்களுக்கான நிதி எவ்விதமான பிழையான வழிகளிலும் வீண் விரயமாக்கக் கூடாது. அதேநேரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த கோப் அறிக்கைக்கு அமைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பொதுமக்களின் பணத்தை பாதுகாக்கும் அமைப்பாக பாராளுமன்றம் காணப்படுகிறது. இதனை உணர்ந்து அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# செயலமர்வு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் தின் நெறிப்படுத்தலின் கீழ் வடமாகாணத்தில் உள்ள 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளை தரம் உயர்த்தும் வேலைத்திட்டம் நடைபெறவுள்ளது.

இதில் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 24 ஆரம்பக் கல்வி பாடசாலையிலிருந்து தலா ஒரு ஆசிரியர் வீதமும் கலந்துகொள்ள வேண்டும். இதில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகருக்குமான மூன்று நாள் வதிவிடச் செயலமர்வும் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மூன்றாம் திகதி வரை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள இறையியற்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆசிரியர்களையும் ஆசிரிய ஆலோசகரையும் உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்கமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)

# கென்யாவில் பயங்கர குண்டு வெடிப்பு!

## 28 பேர் படுகாயம்; 4 பேர் கவலைக்கிடம்



'கென்யத்' தலைநகரான நைரோபியில் நேற்று நிகழ்ந்த பயங்கர குண்டு வெடிப்பில் 28 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் 4 பேரின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவின் தலைநகரின் மையப்பகுதியில் உள்ள சொப்பிங் கடையின் அருகே இந்த வெடிகுண்டு தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

நேற்று பிற்பகல் நிகழ்ந்தப்பட்ட இக்குண்டு வெடிப்பில் மொய் அவென் யூவில் சொப்பிங் செய்ய வந்த பொதுமக்களே படுகாயமடைந்தவர்களாவர்.

இந்தக் குண்டுவெடிப்பு குறித்து கென்யப் பிரதமர் ரைலா ஒடிங்கா கூறியதாவது, இது தீவிரவாதிகள் செய்த நாசவேலை. இது கொடூரமான செயலாகும். இது எங்களை அச்சுறுத்தும் செயலாகும்.

இத்தாக்குதலுக்கு சோமாலியா மற்றும் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதிகளே காரணம் என்று கென்ய பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (அ-2-7)

# ஹபீஸ் சயீதை ஒப்படைத்தால் பாக்.கிற்கு பத்து மில்லியன் அமெரிக்க டொலர்கள்

## இந்தியா அறிவிப்பு



மும்பை தாக்குதல் (2008-11-26) சம்பவத்திற்கு மூளையாக செயற்பட்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தை ஒப்படைத்தால் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்க இந்தியா தயாராகவுள்ளதாக இந்திய உள்துறை செயலாளர் ஆர்.கே.சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் இருநாட்டு உள்துறை செயலாளர்கள் மட்டத்திலான அளவில் மாநாடு பாகிஸ்தானில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் இருநாட்டு உள்துறை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது நடைபெற்ற ஊடக சந்திப்பில் செய்தியாளர் ஒருவர் ஹபீஸ் சயீத் குறித்து தகவல் தந்தால் 10 மில்லியன் டொலர் அளிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில் இத்தொகையை இந்தியாவே வைத்துக் கொள்ளுமா என்ற கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலடி அளிக்கும் வகையில் ஹபீஸ் சயீத்தை ஒப்படைத்தால் பாகிஸ்தானிற்கே அத்தொகை அளிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-2)


# அரசாங்க அறிவித்தல்

## கூறுவிலை கோரல் - கலாசார மண்டபம் அமைத்தல்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால் சங்கானை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் கலாசார மண்டபங்கள் நிர்மாண வேலைக்காக தகவுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

2. விலைக்கேள்வியாளர் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட தரத்தினை கொண்டவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயர் இடம் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. தகைமை பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4. ஆர்வம் உள்ள தகவுடைய விலைக்கேள்வியாளர்கள், பொறியியலாளர்கள் , மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல-0213211657) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்பதுடன் இம்முகவரியில் மு.ப9.00 மணியிலிருந்து பி.ப4.00 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

5. ஆர்வம் உள்ள விலைக்கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை பொறியியலாளர், மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்துமூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 28.05.2012 முதல் 18.06.2012 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையாக ரூ500/- ஐ கட்டணமாக செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

6. மூடி சீல்வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 18.06.2012ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன்மூலமாகவோ அல்லது பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமாகவோ இருபிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபால் உறையின் இடது மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் பி.ப.3.30 மணிக்கு திறக்கப்படும்.

7. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.

8. கீழ் அட்டவணையில் குறிப்பிட்ட விலைகூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

9. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விப்பிணைப்பொறுப்பு இலக்கம் இடப்பட்டிருத்தல் வேண்டும். பிணை பொறுப்பு காலம் கேள்வி முடிவுத் திகதியில் இருந்து 60 நாட்கள் இருத்தல் வேண்டும்.

| வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் | தேவையான தரம் M6/C7 | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப் படாத தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|
| சங்கானை | 8 | 06 மாதம் | M6/C7 | 70,290.00 | 500.00 |
| தெல்லிப்பளை | 5 | 06 மாதம் | M6/C7 | 42,190.00 | 500.00 |
| சாவகச்சேரி | 2 | 03 மாதம் | M6/C7 | 17,190.00 | 500.00 |
| பருத்தித்துறை | 2 | 03 மாதம் | | 17,390.00 | 500.00 |

க.அருமைநாயகம்
மாவட்ட செயலர்,
யாழ்.மாவட்டம்.

(சி-102)

# 60 அடி உயரத்திலிருந்து தவறி வீழ்ந்து மரணம்

## வடமராட்சியில் சம்பவம்

(கரவெட்டி)

வடமராட்சியில் 60 அடி உயரமான தண்ணீர்த்தாங்கியில் இருந்து தவறி விழுந்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9 மணிக்கு புலோலி வடக்கு 60 ஆம் கிணற்றடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 75 அடி உயரமான நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டு வரும் பணி இடம்பெற்று வருகின்றது.

இதில் நிர்மாணப் பணியில் ஈடுபட்டு வரும் கொழும்பு பாணந்துறையைச் சேர்ந்த எம்.பி எஸ்.பி பிலிப்பன்ஸ் பெனான்டோ (வயது- 38) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# வடமராட்சிப்பிரதேசத்தில் தற்கொலை முயற்சிகள் அதிகரிப்பு

## பருத்தித்துறை பதில் வைத்தியர் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகளை கட்டுப்படுத்த சமூக அமைப்புக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வர வேண்டுமென பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எஸ்.சுலோக்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சி பிரதேசங்களில் இருந்து தினமும் 2 பேர் வீதம் தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இதற்கான காரணங்களாக மதுபோதை, மனக்கவலை, காதல் விவகாரம், பகை போன்றவற்றினால் திடீரென உணர்ச்சிவசப்படும் இளம்சமூகத்தினரே அதிகளவாக இச்செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

சமூகத்தில் உள்ள பாடசாலைகள், பொது அமைப்புக்கள் மற்றும் ஆலயங்களில் ஆன்மீகத்தை வளர்த்தல் மற்றும் பொதுப் பணிகளில் இளம் சமூகத்தினரை ஈடுபடுத்தும் போது இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து இளம் சமூகத்தை எதிர்காலத்தில் மீட்க முடியும்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் இளம் சமூகத்தினரை சமூகத்துடன் ஒன்றிணைத்து அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு ஒளியூட்ட அனைவரும் ஒன்றுதிரள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-24)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்,திருவண்ணைநகர் கில்னர் ஒழுங்கை அருள்மிகு மகாமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 14 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (அ-9)




# யாழ்ப்பாணத்தின் மீள்குடியேற்றம் தொடர்பில் அவுஸ்திரேலிய தூதுவர் கவனம் செலுத்தினார்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்க அவுஸ்திரேலியா நடவடிக்கை எடுக்கும் என அந்நாட்டு உயர்ஸ்தானிகர் திருமதி றொபின் மோடி தெரிவித்துள்ளார். யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை நேற்று மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அரச அதிபர் கூறுகையில்,

யாழ். மாவட்டத்தில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக விளக்கப் படங்களின் உதவியுடன் எடுத்துக்கூறியிருந்தேன்.

அத்தோடு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் கூறியிருந்தேன்.

மேலும் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வந்திருந்தேன்.

அதற்கு மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலையான வாழ்வாதாரத்தை முன்னெடுக்க கூடுதல் கவனம் எடுக்கப்படும் எனவும் அந்த மக்களுக்கு உதவிகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

மேலும் வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் கூறியபோது மிகவும் கவனமாக குறிப்புகள் எடுத்துச் சென்றார்.

இந்தச் சந்திப்பு யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாகவே அமைந்திருந்ததாக யாழ். அரச அதிபர் கூறினார். (அ-6)

# ரி.56 ரக துப்பாக்கி இராணுவப்பொறுப்பு அதிகாரியிடம்

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு பொலிஸாரால் மீட்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியை பருத்தித்துறை இராணுவ பொறுப்பதிகாரியிடம் பாதுகாப்பாக ஒப் படைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மேற்படி துப்பாக்கியை பொலிஸார் மீட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தியிருந்தனர்.

இதனால் மன்றினால் நேற்று முன்தினம் ரி-56 ரக துப்பாக்கியை பருத்தித்துறைப் பிரதேச இராணுவ பொறுப்பதிகாரியிடம் பாதுகாப்பிற்காக ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-3-24)

# உயரம் பாய்தல் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம்



(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உயரம் பாய்தல் போட்டியில் கரணவாய் மகா வித்தியாலய மாணவி செந்தில்ராசா பத்மறூபி முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.யாழ், துரையப்பா விளையாட்டு அரங்கில் அண்மையில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தடகளப்போட்டிகளில் 11 வயது பிரிவில் உயரம் பாய்தலில் முதலா மிடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (அ-3-24)

# தகாத வார்த்தைப் பிரயோகம்; நபர் கைது

(கரவெட்டி)

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெரு பகுதியில் காவலரணில் பணியாற்றிய இராணுவத்தினரிடம் மதுபோதையில் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரால் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸாருடன் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த நபரை மருத்துவ பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உட்படுத்தப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் என். பிரபாகரன் தெரிவித்துள்ளார். (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தர்மடப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி ஆகிய பகுதிகளிலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக இன்று புதன்கிழமை உரும்பிராய் மற்றும் ஊரெழுப் பிரதேசத்தின் இரு பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# மாணவி மீது தாக்குதல்

(கரவெட்டி)


உடுப்பிட்டி யாழ் வீச் விடுதிக்கு முன்பாக உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர் ஒருவர் தாக்கியதில் பாடசாலை மாணவி ஒருவர் தலையில் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பட்டி மகளிர் கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி தனது வீட்டில் கணனி கற்றுக்கொண்டிருந்ததாகவும் திடீரென்று உள்நுழைந்த நபர் மாணவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தடியால் கடுமையாக தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் இடம்பெற்ற சமயம் குடும்பத்தார் அருகில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு சென்றிருந்தனர்.

இச்சம்பவம் தனிப்பட்ட தகராறு காரணமாகவே இடம்பெற்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-24)







இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வேதபாராயண அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்திய புண்ணியக்கிராம விழா அண்மையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மகா கணபதி கோயிலில் கோமாதா பூஜை நடைபெறுவதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

ஆத்தை படுகிற பாட்டிலை
குத்தியன் பாலுக்கு அழுதானாம்
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மாயமான்கள் சேர்ந்து நடத்திய பட்டாபிஷேகம்

கூனியின் வஞ்சகம், கைகேசியின் பேராசை, தசரதனுக்கான சாபம் இம் மூன்றும் சேர்ந்துதான் இராமனைக் காட்டுக்கு அனுப்பியது.

இராமன் ஏன் காடு செல்ல வேண்டும்? என்பதற்கான தேடல், இராவணனுக்கு முடிவு கட்டுவதற்காக என்பதாக இருக்கும்.

இராவணனுக்கு இராமனால் அழிவு நிச்சயிக்கப்பட்டதென்பதற்கப்பால், பதினான்கு ஆண்டு கால வனவாச காலத்திற்குள் இராமன் பட்ட அவலம் மிகவும் மோசமானது.

அதிலும் தன் மனைவியை, இராவணன் கடத்திச் சென்ற சம்பவத்தால் இராமன் எத்துணை துன்பப்பட்டிருப்பான் என்பதை ஒரு கணம் நினைக்கும்போது,

எல்லாம் மாயமானைப் புரிந்து கொள்ள முடியாததால் வந்த வினை என்று கூறிக் கொள்ளலாம்.

மாயமான் மீது சீதைக்கு ஆசையில்லாமல் இருந்திருந்தால், இராமனும் சீதையும் துன்பப்படாமலே இராவணனுக்கு முடிவு ஏற்பட்டிருக்கும்.

என்ன செய்வது! மாயமானை நிஜம் என்று நினைத்ததால் பெரும் துன்பம் ஏற்பட்டது.

எனினும் அயோத்தி மாநகரில் இராமனுக்கு நடந்த பட்டாபிஷேகத்துடன் இத் துன்பம் முடிவுக்கு வருகிறது.

ஆனால், இங்கோ பட்டாபிஷேகத்துடன் தான் மாயமான் விளையாட்டே தொடங்குகிறது.

ஆம், தமிழரசுக் கட்சியின் 14–வது தேசிய மாநாடு கடந்த 27–ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது.

மாநாட்டில் வீறாப்பான உரைகள். வன்னியில் நடந்த அவலங்களைக் கூறி, வெளிவிட்ட பெருமூச்சுக்கள், எங்கள் இனம் இன்னமும் படும் துன்பத்தை அடையாளப்படுத்தும் பட்டோலைகள். முப்பது ஆண்டு காலப் பெரும் துன்பம் இன்னமும் நீங்கவில்லையே என்ற ஏக்கங்கள்,

இவையனைத்தும் தமிழரசுக் கட்சி மாநாட்டில் ஒலிக்க, மாநாட்டில் கூடியிருந்தவர்கள் சிங்கள அரசை என்ன செய்யலாம் என்று சிந்தித்த போது,

மாநாட்டு மண்டபத்தில் திடீர் பட்டாபிஷேகம்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவுக்கு இந்த பட்டாபிஷேகம் நடக்கிறது.

தலைப்பாகை வைத்து பொன்னாடை போர்த்தி அந்த விழா நடந்தது.

எதற்காக இந்த ஏற்பாடு? தமிழரசுக் கட்சியின் தலைவராக சம்பந்தர் தெரிவாகுவதில் எந்த ஆனந்தமும் இருக்க முடியாது.

ஏனெனில் அவரைவிட்டால் அந்தக் கட்சியின் தலைமைக்கு வேறுயாரும் இல்லை. அப்படியானால் எதற்கு இந்த பகட்டுப் பட்டாபிஷேகம்?

ஓ! இராமரின் பட்டாபிஷேகத்திற்கு முன்னதாக நடந்த மாயமான் நிகழ்வு போல, இங்கு பட்டாபிஷேகத்தையே மாயமான்கள் நடத்தியுள்ளன.

தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டாலேயே வெற்றி என்ற நிலையில் சம்பந்தரை இறுகப் பற்றிக் கொள்வதுதான் சீற் பிடிப்பதற்கு ஒரே வழி என்று கருதியவர்கள்; வன்னி இழப்புகளை மறந்து, தறப்பாள்களுக்குள் குந்தியிருக்கும் எங்கள் தமிழ்க் குடும்பங்களை மறந்து, மூன்று ஆண்டுகளுக்கு முன் இவர்களை வழிப்படுத்தியவர்களை – கூட்டமைத்தவர்களை நினைக்க மறந்து சம்பந்தப் பெருமானுக்கு பட்டாபிஷேகம் செய்து பதவி பெற முடிவு கட்டினர் போலும்.

ஐயா! பட்டாபிஷேகத்தோடு வந்துள்ள மாயமான்களை நம்பிவிடாதீர்கள்.

தமிழ் மக்களுக்காக தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாரைவார்க்கத் தயாரானவர்களுக்கே எதிர்காலத்தில் ஆசனம் கொடுங்கள்.

இல்லையேல் மாயமான் துன்பம் உங்களை கடுமையாக வாட்டும். உங்களையும் ஓரங்கட்டும். இது சர்வ நிச்சயம்.

### கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்

# விசேட நீதிமன்றம் என்ற பல்லவியை மீண்டும் பாடாதீர்கள் – மனோ கணேசன்

நீண்டகாலமாக சிறைவாழ்க்கை வாழ்கின்ற கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி உடன் விடுதலை செய்யுங்கள். ஏனையவர்களை உடனடியாக புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றி, புனர் வாழ்வுப் பயிற்சிகளை அளித்து அவர்களை அவர்களது குடும்பத்தவர்களிடம் ஒப்படையுங்கள். விசேட நீதிமன்றம் என்ற பழைய பல்லவியைப் பாடி காலத்தை இழுத்து அரசியல் செய்யாதீர்கள் என கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு எதிரில் நேற்று நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளின் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்தொகையில் கலந்து கொண்டு கொழும்பு வெலிகடைச் சிறைச்சாலைக்கு எதிரில் நேற்று நண்பகல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

பொதுமன்னிப்பு இன்று தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு வழங்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்களான கருணா அம்மான் என்ற முரளிதரன், பிள்ளையான் என்ற சந்திரகாந்தன், கேபி என்ற கே. பத்மநாதன் மற்றும் தயா மாஸ்டர் ஆகிய சிலருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் ஆட்சேபிக்கவில்லை. நாட்டின் நல்வாழ்விற்கு அவை அவசியம் என்றால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது.

ஆனால், ஏன் இந்தப் பாரபட்சம்? ஏனைய தமிழ்க் கைதிகள் தொடர்பில் அரசுக்கு ஏன் இந்த இரட்டைக் கொள்கை? தங்கள் கட்சியுடன் இணைந்து கொண்டால் தேசியவாதி என்றும் இணையாவிட்டால் பயங்கரவாதி என்றும் அரசாங்கம் கணக்குப் போடுவதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இன்றைய அமைச்சர்களான இந்த முன்னாள் புலித்தலைவர்களுக்கு அன்று தண்ணீர் கொடுத்தவர்களும் சாப்பாடு கொடுத்தவர்களும் இருக்க இடம் கொடுத்தவர்களும் அவர்களது ஆணைகளை ஏற்று செயல்பட்டவர்களும் நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டுள்ளதை உலகம் ஏற்றுக் கொள்ளாது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும். அதேபோல் இவர்களது விடுதலை தொடர்பில் தமக்கு உள்ள தார்மீகப் பொறுப்பை அரசாங்கத்தில் இன்று இடம்பெற்றுள்ள இந்த முன்னாள் புலித்தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கொழும்பு, களுத்துறை, வவுனியா, யாழ்ப்பாணம், கண்டி, நீர்கொழும்பு, அநுராதபுரம், பூசா ஆகிய சிறைக் கூடங்களில் மலையகம், வடக்கு, கிழக்கு, கொழும்பு ஆகிய அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த தமிழ்க் கைதிகள் இருக்கிறார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த தமிழ் கைதிகள் அனைவரும் அரசியல் கைதிகள் தான். அரசியல் இலட்சியத்திற்காகவே சட்டமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு இவர்கள் உள்ளாகியுள்ளனர்.

ஆனால் தங்கள் கட்சியில் இணைந்து கொண்ட பலரை பொதுமன்னிப்பு அளித்து அரசாங்கம் விடுதலை செய்துள்ளது. அரசியல் காரணங்களுக்காக அவர்களை விடுதலை செய்தது போல் அரசியல் காரணங்களுக்காக இவர்களை விடுதலை செய்யாமல் அரசாங்கம் வைத்திருக்கிறது. இதுதான் உண்மை. எனவே சிறை வைக்கப்பட்டுள்ள இவர்கள் அரசியல் கைதிகளே. இதில் சந்தேகம் அல்லது மாறுபட்ட கருத்து எவருக்கும் இருக்க முடியாது.

இதுபற்றி விளக்கம் இல்லாதவர்கள் இந்த அரசில் இருக்கின்ற முன்னாள் புலித் தலைவர்களிடம் இதுபற்றி கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசில் இருப்பதன் காரணமாகத்தான் தாம் விடுதலை செய்யப்பட்டுள்ளோம் என்ற உண்மையை அரசில் இருக்கின்ற இந்த முன்னாள் புலித் தலைவர்கள் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும். அதேபோல் தாங்கள் சொல்லித்தான் இந்தக் கைதிகள் இப்படி நடந்து கொண்டார்கள் என்ற உண்மையை தமது அரசாங்கத்தலைவர்களுக்கு அவர்கள் எடுத்துக் கூறவேண்டும் என கூறிவைக்க விரும்புகின்றேன்.

அரசாங்கம் இன்று விசேட நீதிமன்றங்களை நிறுவி வழக்குகளை விசாரிக்கப் போவதாக சொல்கிறது. இந்த விசேட நீதிமன்ற வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் எனக்குத் தெரிய இதற்கு முன்னர் இரண்டு தடவை வழங்கியுள்ளது. இது மூன்றாம் முறை. இதற்கு முன்னர் நீங்கள் நிறுவிய விசேட நீதிமன்றங்கள் எங்கே என நாம் கேட்கிறோம். அவற்றை என்ன சுனாமி கொண்டு போய்விட்டதா? எங்களைப் பொறுத்தவரையில் விசேட நீதிமன்ற தீர்வுக் கதை ஆறிப்போன பழங்கஞ்சி. மீண்டும் மீண்டும் சொல்லி காலத்தைக் கடத்தும் பழைய பல்லவி. இதற்குத் துணைபோக நாம் இனிமேலும் தயாரில்லை.

பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய் அல்லது புனர்வாழ்வு அளித்து விடுதலை செய் என்ற எமது கோரிக்கை தெளிவானது. நீண்டகாலமாக சிறைவாழ்க்கை வாழுகின்ற கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி உடன் விடுதலை செய்யுங்கள். ஏனையவர்களை உடனடியாக புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றி புனர்வாழ்வுப் பயிற்சிகள் அளித்து அவர்களை அவர்களது குடும்பத்தவர்களிடம் ஒப்படையுங்கள். இதைத் தவிர வேறு தீர்வுகளைச் சொல்லி காலம் கடத்தாதீர்கள். உங்களது பம்மாத்து தீர்வுத் திட்டங்களைக் கேட்டு காது புளித்துப் போய்விட்டது. மனதும் சலித்து விட்டது.

குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ள அல்லது தீர்ப்பு வழங்கப்பட்டு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க சட்டத்தில் இடமில்லை என அரசாங்கம் அப்பாவித்தனமாகச் சொல்வதை அப்பாவித்தனமாகக் கேட்டுக் கொண்டு தலையை ஆட்ட எமக்கு முடியாது. சட்டம் இல்லை என்றால் புதிய சட்ட திருத்தங்களை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுங்கள். அனைத்து எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் நாம் பெற்றுத் தருகின்றோம்.

காலையில் சமர்ப்பித்து, பகல் விவாதம் செய்து, மாலையில் வாக்கெடுப்பு நடத்தி, ஒரே நாளிலேயே நாட்டின் அரசியலமைப்பிலேயே திருத்தம் கொண்டுவந்து, சாதனை செய்தது இந்த அரசாங்கம் தான். அது இவர்களுக்கு மறந்து விட்டதா? அல்லது அரசாங்கத்தின் நீதி அமைச்சருக்கும், அரசில் இடம் பெறும் தமிழ் பேசும் அரசியல்வாதிகளுக்கும் மறந்து விட்டதா?

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஜனநாயக தேசிய கூட்டணி, முன்னிலை சோஷலிச கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் கைதிகளின் விடுதலை தொடர்பான புதிய சட்டத்திருத்தங்களுக்கு ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அரசாங்கத்தில் இடம்பெறும் ஈ.பி.டி.பி, இ.தொ.க, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இந்த விடயத்தில் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். ஆகவே சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லி காலத்தை கடத்தி கைதிகளின் வாழ்க்கையுடன் விளையாடாதீர்கள்.

சிறையில் இருக்கும் இவர்கள் இலங்கை பிரஜைகள் இல்லையா? இவர்களுக்கு சுதந்திரக் காற்றை சுவாசிக்க உரிமை இல்லையா? யுத்தத்தை முடித்து வைத்து நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித்தந்து விட்டோம் என இந்த அரசாங்கம் திரும்ப, திரும்ப சொல்லிக் கொண்டு இருக்கிறது. ஆஹா, எங்கே அந்த சுதந்திரம் என தமிழர்களாகிய நாங்கள் நாடு முழுக்க பூதக் கண்ணாடியை வைத்து கொண்டு தேடுகிறோம். எங்கே தேடியும் அது இன்னமும் தென்படவில்லை.

உண்மையில் அரசாங்கத்தின் ஊழல், மோசடி ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்களை சமாளிக்க இந்த அரசாங்கத்திடம் உள்ள ஒரே மந்திரம் இது தான். அரசாங்கம் சொல்வதை ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும் கூட, ஏன் அந்த சுதந்திரம் இந்த வெலிக்கடை சிறையின் மதில் சுவர்களுக்கு அப்பால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்அரசியல் கைதிகளுக்கு சுதந்திரம் இல்லையா? இலங்கை பிரஜைகளான அவர்களுக்கு சுதந்திரக் காற்றை சுவாசிக்க உரிமை இல்லையா?

அவர்களது இளமைக் காலம் முழுக்க சிறைக் கூடங்களிலேயே வீணாக வேண்டுமா? அங்கே பெண்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறைக் கூடங்களின் உள்ளேயே பிறந்த குழந்தைகளும் இருக்கிறார்கள். மதத் தலைவர்களும், வயோதிபர்களும், அங்கவீனர்களும் இருக்கிறார்கள். இவர்களை உள்ளே அடைத்து வைத்து விட்டு, வெளியே நீங்கள் வெற்றி விழா நடத்துகிறீர்கள். இதற்கெல்லாம் நீங்கள் ஒரு நாள் இயற்கை நீதிதேவனுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பதை மறவாதீர்கள் என மனோ கணேசன் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (ந–8–1)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உள்ளத்தை திறந்துவை



இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம், குரல், தோற்றம் எல்லாமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

நாம் செலுத்தும் பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் ஏதாவது ஒரு நலனைத் தர வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கும் வரை உண்மையான பக்தி ஏற்படாது.

நமது உள்ளத்தை திறந்து வைத்திருந்தால் உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்கள் ஆகிவிடுவோம்.

தன்னை அடக்கப் பழகியவன் வெளியே உள்ள எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு அதன் பின் அடிமைத்தனமும் இல்லை. அவனது மனமும் விடுதலை பெற்றுவிடுகின்றது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவனாகின்றான்.

இறைவனுக்கு பணி செய்ய விரும்புபவன் முதலில் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பணி செய்ய வேண்டும். இறைவனது தொண்டர்களுக்கு தொண்டு செய்பவனே அவரது உத்தமத்தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கனகரத்தினம் ம.ம.வி.க்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திருமதி றொபின்மோடி நேற்று முற்பகல் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

வட பகுதிக்கு இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த உயர்ஸ்தானிகர் பலதரப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்றார்.

நேற்று கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு சென்ற உயர்ஸ்தானிகருக்கு அங்கு தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி அமோக வரவேற்பளிக்கப்பட்டிருந்தது.

அத்தோடு அவுஸ்திரேலிய நாட்டின் ஜி.ஐ.இசற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் ஆங்கில அறிவினை வளர்ப்பதற்கான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டிருந்த ஆசிரியர்கள், அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.



இது தவிர அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் இங்கு அமைக்கப்பட்டு வரும் கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டார்.

இதன் பின்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடிய உயர்ஸ்தானிகர் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்த எதிர்காலத்திலும் உதவிகள் வழங்க தமது நாடு தயாராகவுள்ளதெனவும் நிர்வாக ரீதியாகவும் உதவிகள் செய்யவும் தாம் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடமாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம், கல்லூரி அதிபர் ஜி.ஐ.இசட் வதிவிட பிரதிநிதி , அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு ஏற்பாடு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கற்கை நெறியினை நிறைவு செய்த 2005/2007, 2006/2008, 2007/2009, 2008/2010 ஆகிய கல்வியாண்டுக்கான ஆசிரியர்களு க்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் இடம்பெறவுள்ளது என கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கல்வியாண்டில் பயிற்சியை முடித்த ஆசிரியர்களின் விபரங்களை பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதால் இவ்வாசிரியர்கள் தமது சுய விபரங்களுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் எனக் குறிப்பிடப்பட்ட கடிதவுறை யினை பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, இராஜவீதி, கோப் பாய் என்னும் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கல்லூரியின் பீடாதிபதி கேட்டுள்ளார். (எ-7)

# உள் விவகாரங்களில் தலையிட வேண்டாம்

## பிரிட்டனுக்கு பீரிஸ் எச்சரிக்கை

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீனுக்கு வெளிவிவகார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீனை அழைத்து அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

வடக்கில் இராணுவம் நிலை நிறுத்தப் பட்டுள்ளமை தொடர்பில் ரான்கீன் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். வடக்குக்கிழக்கில் மட்டும் அதிகளவான படையினர் குவிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்திருந்தார்.

பிரித்தானிய பாராளுமன்றம் மற்றும் மனித உரிமை ஜனநாயகம் தொடர்பான அறிக்கையில் பகிரங்கமாக வெளியிடப்பட்ட கருத்துத் தொடர்பிலேயே குறிப்பிட்டதாக ரான்கீன் விளக்கமளித்துள்ளார்.

எவ்வாறெனினும் உள்விவகார விடயங்களில் இராஜதந்திரிகள் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் பீரிஸ் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். (அ-2)

## ஜனாதிபதி மகிந்த தாய்லாந்து விஜயம் பிரதமர் ஷின்வாத்ராவுடன் சந்திப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 4 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று தாய்லாந்துக்கு விஜயம் செய்துள்ளார். இவரை அந்நாட்டு பிரதிப் பிரதமர் சுவர்ணாபிமானி விமான நிலையத்தில் வைத்து வரவேற்றுள்ளார்.

தாய்லாந்தின் பிரதமர் யின்லக் ஷின்வாத்ராவுடன் அவர் நேற்று இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு தாய்லாந்து பிரதமரால் மதியபோசன விருந்துபசாரமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு அமைய நிதி ஆதாரங்களை பரிமாற்றி கொள்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சுகளிடையே ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இதனிடையே மகா சக்ரி சிறிதொன் இராஜகுமாரியை இன்று ஸ்ராபெத்தும் மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சந்திக்கவுள்ளார்.

இலங்கை மற்றும் தாய்லாந்துக்கு இடையில் சமய, கலாசார, அரசியல் மற்றும் வர்த்தக உறவுகள் ஆரம்பக்காலம் தொட்டு நிலவிய அதேவேளை இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் 1995 ஆம் ஆண்டே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன. (அ-7)

## முஸம்மிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு மாநர மேயர் ஏ.ஜே.எம் முஸம்மிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

முஸ்லிம் எம்.பி.க்கள் சிலரை மேயர் முஸம்மில் தம்புள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்று இஸ்லாமிய கலாசாரத்திற்கு விரோதமான செயல்களை செய்வதற்கு ஊக்குவித்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரான மொஹமட் மஹ்ரூப் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேயர் முஸம்மில் கருத்து தெரிவிக்கையில், தனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முயற்சிப்பதன் மூலம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புரளி ஏற்படுத்த முனைவதாக கூறியுள்ளார். (அ-2)

## ஜேர்மனியில் ஈழத்தமிழர் ஆதரவாக

# அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுவை உருவாக்க முயற்சி

(கொழும்பு)

ஜேர்மனியில் வாழும் ஈழத்தமிழர்களின் அரசியல் விவகாரமாக ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர்களின் மத்தியில் ஓர் அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுவை உருவாக்கும் முயற்சியில் ஜேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை முழு முயற்சியை எடுத்து வருகின்றது.

அந்த வகையில் கடந்த மாதங்களாக அவர்களுடனான பல சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. இதன் வரிசையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் துணைச் செயலாளர் சி. மகேந்திரன் ஜேர்மன் வருகையை முன்னிட்டு பல்வேறு கட்சியுடனான சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கலந்துரையாடலின் ஈழத்தமிழர்களின் உரிமையை நிலை நாட்ட ஜேர்மன் அரசாங்கத்தின் முக்கியத்தை வலியுறுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு இலங்கை அரசின் திட்டமிட்ட தமிழர் மீது தொடரும் இனவழிப்பை ஆழமாக சுட்டிக்காட்டியதோடு அந்த மக்களின் விருப்பை மற்றும் தம்மை தாமே ஆளும் அரசியல் பேரவாவை அதற்கான இறுதித் தீர்வு தமிழீழமே எனும் அவசியத்தை எடுத்துரைக்கப்பட்டது.

சி. மகேந்திரன் உரையாற்றுகையில்,

ஈழத்தமிழர்கள் தமது உரிமையை நிலை நாட்ட அவர்களின் விருப்பை உறுதிப்படுத்தும் முறையில் அதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறையில் சர்வதேச கண்காணிப்பில் ஓர் பொதுஜன கருத்துக்கணிப்பு நடத்துவதின் அவசியத்தையும் தெரிவித்தார்.

சந்தித்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஈழத் தமிழர்களுக்கான தமது முழு ஆதரவையும் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் துணைச் செயலாளர் சி. மகேந்திரனுடன் மக்கள் சந்திப்பும் நடத்தப்பட்டது. இச்சந்திப்பில் அவர் இந்திய மத்திய அரசின் ஈழம் சார்ந்த நிலைப்பாடு தமிழ்நாட்டு தலைவர்களின் உறவுகளின் நிலைப்பாடு, செயற்பாடு தொடர்பாக கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் அவலத்தின் துயரங்களையும் வேதனைகளையும் வார்த்தைகளில் வடித்து கண்களில் கண்ணீரை வரவழைத்து நெஞ்சங்களை துடிக்க வைக்கும் வகையில் சி. மகேந்திரன் எழுதிய வீழ்வேனென்று நினைத்தாயோ என்ற நூல் வெளியீடும் நடைபெற்றது.

அத்தோடு கனேடியதமிழர் தேசிய அவையின் தமிழ் ஊடக பேச்சாளர் தேவா சபாபதயின் தயாரிப்பில் முள்ளிவாய்க்கால் வலியை தாங்கி சிறந்த ஆவணப்படமாக மிக விரையில் தோன்ற இருக்கும் களம் திரைப்படத்தின் இசை இறுவெட்டு வெளியீடும் நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழ் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைச்செயலாளர் சி. மகேந்திரன், சர்வதேச மனிதவுரிமை அமைப்பு பிரேமன், தலைவர் விராஸ் மெண்டிஸ், கனேடிய தமிழர் தேசிய அவையின் தமிழ் ஊடக பேச்சாளர் தேவா சபாபதி மற்றும் ஜேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவையின் சார்பில் ஜெயசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-2)

# முஸ்லீம் சமூகத்திற்கு எதிராக போராட்டம் நடத்தப்படவில்லை

## கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக போராட்டம் நடத்தப்படவில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராகவே போராட்டம் நடத்தப்பட்டதாகவும் அதனை முஸ்லிம் மக்களுக்கு எதிரானதாக கருதப் படக் கூடாது எனவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மன்னார் ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு எதிராக அமைச்சர் பதியுதீன் கருத்து வெளியிட்டுள்ளதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

மன்னார் ஆயருக்கு எதிராக கருத்து வெளியிட்ட அமைச்சுக்கு எதிராக மட்டுமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போராட்டம் நடத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வெளியிடும் கருத்துக்கள் மிக நிதானமாக வெளியிடப்பட வேண்டுமென அவர் குறிபிப்பிட்டுள்ளார். சமூகங்களுக்கு இடையில் பிளவினை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்படக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வேக நடையில் வவுனியா சம்பியன்




வட மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் கடந்த 27ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் வட மாகாண ரீதியிலான ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாருக்குமான வேகநடைப் போட்டிகள் நடை பெற்றிருந்தன.

இப்போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பிரிவுகளிலும் வவுனியா மாவட்ட அணிகள் வெற்றி பெற்று சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

வவுனியா நகரசபை மைதான முன்றலில் இருந்து ஆரம்பமான இப் போட்டிகள் ஆண்களிற்கு 20 கிலோமீற்றர் தூரம் கொண்டதாகவும், பெண்களிற்கு 10 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாகவும், போட்டிகள் நடைபெற்றன.

ஆண்களில் முதல் 10 இடங்களைப் பெற்றிருந்தவர்களும், பெண்களில் முதல் 8 இடங்களைப் பெற்றவர்களும்எதிர்வரும் யூன் 17ஆம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்ட வேக நடைப் போட்டிகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதில் ஆண்கள் வேக நடைப்போட்டியில் வவுனியா மாவட்டம் 26 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தையும், யாழ்.மாவட்டம் 14 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும்,

பெண்கள் வேகநடைப் போட்டியில் வவுனியா மாவட்டம் 52 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வலைப்பந்தாட்ட அரையிறுதி

(கரவெட்டி)

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தின் வலைப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டத்திற்கு நான்கு அணிகள் தெரிவாகியுள்ளன.

யாழ்.மாவட்ட 19 கழகங்களுக்கிடையில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வந்த வலைப்பந்தாட்டப் போட்டியில் அரையிறுதிப்போட்டியில் நான்கு அணிகள் மோதவுள்ளன.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய A அணியை எதிர்த்து கரணவாய் அணியும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய B அணியை எதிர்த்து கம்பர்மலை கம்பன் அணி மோதவுள்ளது. (ரு-3,24)

## வட.-கிழக்கு நிர்வாக...

நல்லிணக்க முயற்சிகள் பயனற்றதாக அமைகின்றன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படாமை, தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றமை போன்ற காரணிகள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தடையாகவுள்ளது.

அதேவேளை போர் முடிபுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் விடுதலைப்புலிகளின் போராளிகள் தமது வாழ்வைக் கட்டியெழுப்புவதில் மிகவும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கையில் மீண்டும் போர் ஆரம்பமாகாமல் இருப்பதற்கு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என ஐ.ஆர்.ஐ.என் இணையத் தளம் தெரிவித்துள்ளது. (ரு-8;11)

## கோம்பாவிலில்...

கோம்பாவில் பகுதியில் நேற்று வெடிபொருள் ஒன்று வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கோம்பாவில் நான்காம் வட்டாரம் அரசடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் குப்பைகளை கூட்டி எரித்தபோது குப்பைக்குள் இருந்த வெடி பொருள் வெடித்துச் சிதறியதில் மூன்று பிள்ளைகளின் தாயான 37 வயதுடைய அசோக்குமார் மனோரஞ்சிதம் என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவத்தினை அடுத்து பாதிக்கப்பட்ட பெண் முல்லைத்தீவு பொதுமருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரு-8;11)

## சிறுவன் ரஜிராம்...

சர்பர்த் கடை *(19ஆம் பக்கம் பார்க்க)* வியாபாரி ஒருவரினால் சிறுவன் கூட்டிவரப்பட்டு குறித்த முஸ்லிம் நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான் என்று மன்றில் தெரிவித்ததோடு அச் சர்பத் வியாபாரியின் வாக்கு மூலமும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

எதிராளிகளின் சட்டத்தரணி முன்வைத்த வாதத்தை மறுத்த பாதிக்கப்பட்ட சிறுவன் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கே.சுகாஷ் குறித்த சிறுவன் சீரணிச் சந்தியில் வைத்தே கடத்தப்பட்டதாகவும், எதிர்தரப்பினர் வழக்கினை திசை மாற்ற முயலுகின்றனர் எனவும் தெரிவித்ததோடு,

சிறுவன் மீட்கப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் குறித்த முஸ்லிம் சந்தேக நபர்களைச் சார்ந்தவர்கள் குறித்த சிறுவனின் வீட்டிற்குச் சென்று நீதிமன்றில் சிறுவன் கடத்தப்படவில்லை என்றும் தானாக விரும்பியே சென்றதாகவும் நீதிமன்றில் தெரிவிக்குமாறு சிறுவனின் தாயாரை வற்புறுத்தியுள்ளனர்.

இதுதவிர நேற்றுமுன்தினம் இரவு 2 மணியளவில் குறித்த சிறுவனின் வீட்டின் முன்னால் இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் இருந்ததாகவும் அவர் மன்றில் தெரிவித்தார்.

இந்நிலையில் வழக்கினை விசாரணை செய்த மல்லாகம் நீதவான் சந்தேக நபர்கள் முறைப்பாட்டாளர்களின் சாட்சியங்களில் தலையிடும் பட்சத்தில் அவர்களின் பிணைமனு ரத்துச் செய்யப்படும் எனவும் குறித்த இருவரினையும் அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ரு-4)

## நவநீதம்பிள்ளை...

வுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு வெகுகாலத்துக்கு முன்னரே அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

தற்போதைய நிலைமையில் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமாயின், அது தொடர்பான முறைமைகளை அவர் பின்பற்றியே வரவேண்டும்.

இலங்கைக்கு நவநீதம்பிள்ளை எப்போது விஜயம் செய்வார் என தற்போதைய நிலைமையில் கூற முடியாது. அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமாயின், வெளிவிவகார அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, பயண நிகழ்ச்சி நிரலை தயாரித்த பின்னரே இலங்கைக்கு விஜயம் செய்ய முடியும்.

ஆனால் அது எப்போது நடக்கும் என எம்மால் கூற முடியாது. அது விரைவிலும் நடைபெறலாம் அல்லது 10 வருடங்களின் பின்னரும் நடைபெறலாம் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார். (ரு-8-11)

## சரத்தை விடுதலை...

வர்களின் உறவினர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். *(19ஆம் பக்கம் பார்க்க)*

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன், ஐக்கிய சோசலிசக் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டிருந்தனர்.

இங்கு உரையாற்றிய பலரும் அரசியல் கைதிகளாக இருந்த சிங்கள இளைஞர்கள், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ள அரசு, தமிழ் அரசியல் கைதிகளுக்கு மாத்திரம் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு முன்வராமல் இருப்பது ஏன் எனக் கேள்வி எழுப்பினர்.

தெரிந்த சிறைச்சாலைகளிலும் தகவல் எதுவும் தெரியாத வகையில் இரகசிய தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளாகிய தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகளாக குறிப்பிடாமல் அவர்களை தமிழ் அரசியல் கைதிகளாகவே குறிப்பிடவேண்டும் என்றும் அவ்வாறே அவர்களை நடத்த வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ரு-8 ;11)

## கார் மோதி...

விபத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை சேர்ந்த 10 ஆம் ஆண்டு மாணவன் பலியாகியுள்ளான்.

பாடசாலை விட்டு தனது வீட்டிற்க்கு சென்று கொண்டிருந்த அலோசியஸ் அன்ரூ என்ற மாணவன் தனது வீட்டிற்கு முன்னால் வீதியைக் கடக்க முற்பட்டவேளை கார் மோதியதிலேயே மாணவன் புலியாகியுள்ளான்.

மேற்படி விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை. பலியான மாணவனின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

(ரு-266)

# சவாலுக்கு நாம் தயார் -மொகமட் ஹபீஸ்

இலங்கைக்கு எதிரான சவாலான தொடரொன்றிற்குத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அணியின் மூத்த வீரரும் இருபது-20 சர்வதேச அணியின் தலைவருமான மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான தொடருக்காக இலங்கையை நேற்று வந்தடைந்த பாகிஸ்தான் அணி சார்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் வைத்து இலங்கை அணி மிகப்பலமான அணி என்பதைத் தாங்கள் அறிவோம் எனத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ் மிகவும் சவாலான தொடரொன்றிற்காகத் தாங்கள் தயாராகி வருவதாகத் தெரிவித்தார்.

இலங்கை அணிக்கெதிராக அண்மைக் காலத்தில் விளையாடிய அனுபவம் உள்ளதாகத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், அதன்போது அவர்களுக்கு எதிராக சிறந்த முடிபுகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அணியின் வீரர்கள் கடந்த ஒன்று, ஒன்றரை மாதங்களாக கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டதாகக் கருதுவதாகத் தெரிவித்த அவர், அண்மைக் காலங்களில் சர்வதேசப் போட்டிகள் எவற்றிலும் பங்குபற்றாத போதிலும், பயிற்சிகளில் கடுமையாக ஈடுபட்டுள்ளதாகவும், தங்களுக்குப் பயிற்சிகளுக்காக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பயிற்சிப் போட்டிகள் சிலவற்றையும் ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியின் தயார்படுத் தல்கள் தொடர்பாக மகிழ்ச்சி தெரிவித்த பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர், இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இரண்டு வாரங்கள் பயிற்சி முகாமொன்றில் ஈடுபட்டதாகத் தெரிவித்த அவர், அவை தங்களுக்கு உதவும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை அணி 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு பயிற்சியளித்தமைக்காக பெரும் புகழ்பெற்ற டேவ் வட்மோர், அது ஏராளமான காலங்களுக்கு முன்னர் இடம்பெற்றது என்றும், ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

பழைய நட்புகள் இப்போதும் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும் இங்கு போட்டிகளை வெல்வதற்காகவே வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 இருபது -20 போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றளவுள்ளது.

இதில் முதலில் இருபது -20 போட்டி களும் பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும் இறுதியில் டெஸ்ட் தொடரும் இடம்பெறவுள்ளது.

இருபது-20 போட்டிகள் யூன் முதலாம், மூன்றாம் திகதிகளில் அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ளதோடு, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 7ஆம், 9ஆம், 13ஆம், 16ஆம்,18ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இதில் முதலிரண்டு போட்டிகளும் பல்லேகலை சர்வதேச விளையாட்டு மைதானத்திலும் அடுத்த மூன்று போட்டிகளும் ஆர். பிரேமதாச மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

டெஸ்ட் தொடரில் முதல் போட்டி யூன் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை காலி சர்வதேச மைதானத்திலும், இரண்டாவது போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத் தில் யூன் 30ஆம் திகதி முதல் யூலை 4ஆம் திகதி வரையும், மூன்றாவது போட்டி யூலை 8ஆம் திகதி முதல் யூலை 12 ஆம் திகதி வரை பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

# பேச்சுவார்த்தையில் ஏமாற்றியது...

மீள்குடியேற்றுவதற்கு தயக்கம் காட்டிவரும் இந்த அரசாங்கம் அந்த மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்து பல மாதங்களாகின்றன.

இது தவிர 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இந்திய முகாம்களில் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம், திருகோணமலையில் சம்பூர், முல்லைத்தீவில் பல பிரதேசங்கள், கிளிநொச்சியிலும் கூட இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் தமிழர்களின் நிலங்கள் அகப்பட்டு வருகின்றன.

மேலும் இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்துடன் பேசி வந்தோம். ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் தற்போது பேச்சுவார்த்தை தடைப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையத் தீர்க்கவும் இடம் பெயர்ந்த சகல மக்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றவும் வேண்டும்.

அத்தோடு சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது அவர்கள் தொடர்பான விசாரணைகளையாவது எடுத்துக் கொள்ளவேண்டும்.

போர்க் காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உயிருடன் உள்ளார்களா? இல்லையா? எனத் தெரியாது.

அவர்களின் உறவினர்கள் பெரும் துயரத்தை அனுபவித்து வருகின்றனர். எனவே எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அவர்களின் விபரங்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது இவற்றுக்கு ஆரம்பத்தில் இணங்கிய அரசாங்கம் பின்பு எம்மை ஏமாற்றி விட்டது.

அரசியல் தீர்வு தொடர்பாகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பிலும் அரசாங்கம் தீர்க்கமானதொரு முடிபிற்கு வரவேண்டும்.

தெரிவுக் குழுவிற்கு வரும்படியும் அங்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் பெயர்களை தரும்படியும் அரசு எம்மிடம் கேட்டிருந்தது.

பெயர்களை கொடுப்பதால் எவ்விதப் பயனுமில்லை. பேச்சின் மூலம் தீர்வு எட்டப்படும் எனக் கூறி எம்மை ஏமாற்றியது போலவே தெரிவுக் குழுவிலும் இடம்பெற வாய்ப்புள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை முன்பு நிராகரித்திருந்த போதும் பின்பு அதிலுள்ள இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் போன்ற சில பரிந்துரைகளை ஏற்றிருந்தோம்.

இருப்பினும் அவற்றைக் கூட அமுல்படுத்த அரசாங்கம் முன்வரவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் உளச் சுத்தியுடன் அரசு செயற்பட வேண்டும்.

தமிழர்களை பலவீனப்படுத்தி அவர்களுக்கு உரிமைகளை வழங்காமல் மறுக்கும் நோக்குடன் தமிழர்களின் நிலங்களில் சிங்கள மீனவர் குடும்பங்களையும், விவசாயக் குடும்பங்களையும் குடியமர்த்தி, இராணுவக் கட்டுப்பாட்டிற்குள்ளும் சிங்களப் பேரினவாதத்தின் ஆதிக்கத்தின் கீழ் முழு நாட்டையும் கொண்டு வர அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற விடயங்கள் எம்மால் வலியுறுத்தப்பட்டிருந்தன.

மேலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அவுஸ்ரேலியா உதவும் எனவும் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கத் தாம் தயாராக உள்ளதாகவும் உயர்ஸ்தானிகர் எம்மிடம் கூறியிருந்தார் என மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் பங்கு கொண்டனர். (ந-6)

# அட்டியலை விழுங்கிய ஆசாமி விசேட வைத்தியத்தால் நகை மீட்பு

## யாழ்.நகரில் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள நகைக் கடையொன்றில் நகை ஒன்றினை திருடியவருக்கு நல்ல கவனிப்பு வழங்கப்பட்டு ஊர்வலமாகவும் அழைத்துச் செல்லப்பட்டார்.

யாழ்.வின்சர் தியேட்டர் சந்தியிலுள்ள நகைக் கடையொன்றில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் நகைகள் வாங்குவதைபோல் பாசாங்கு செய்து உள்நுழைந்து கடைக்குள் சென்றவர் அங்கிருந்தவருடன் உரையாடிய வண்ணம் நகைகளினை ஒவ்வொன்றாக பார்த்துள்ளார்.

நகைக் கடைக்காரர் சற்று அசந்தபோது தான் பார்த்துக் கொண்டிருந்த தங்க அட்டியல் ஒன்றை அப்படியே வாய்க்குள் போட்டு விழுங்கியுள்ளார்.

இதையடுத்து குறித்த அட்டியலை காணாததால் நகைக் கடைக்காரர் அதனை தேடியபோது தான் திருடவில்லை என்று குறித்த நபர் ரகளை செய்துள்ளார்.

நடந்ததை ஊகித்துக் கொண்ட கடைக்காரர் குறித்த ஆசாமிக்கு நல்ல அடிபோட்டு வாந்தி எடுக்கவைத்து அட்டியலை மீட்டதோடு, குறித்த ஆசாமியையும் ஊர்வலமாக அழைத்துச் சென்று; பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு யாழ். நகரிலுள்ள புடைவைக் கடையொன்றிலும் திருட்டு முயற்சி ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-4)

மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 ரெக்டர் - 23000/-

அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு

(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

(8523)

MyWay இன் Professional English

50 மணிநேர Video DVD மற்றும் 50 புத்தகங்களின் துணையுடன் முழுமையான ஆங்கில பாடநெறி விலை ரூபா 5600/-

MyWay 182, Stanley Rd, Jaffna 077 33 63 456

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் (தங்கம்மா ரீச்சர்)

(ஓய்வுநிலை ஆசிரியர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)



உசனை பிறப்பிடமாகவும் 15/25, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் 28.05.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் வள்ளியம்மை ஆகியோரின் சகோதரியும், பேரம்பலம் (ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், கலாநிதி துஷ்யந்தி (விவசாய பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), அரவிந்தன் (மருந்தாளர், யாழ் போதனா வைத்தியசாலை), ரகுவிந்தன் (சுவிற்ச்லாந்து), வினோவிந்தன் (வட்டுக்கோட்டை தொழில்நுட்பகல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பேராசிரியர் மிகுந்தன் (விவசாய் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சோமினா (ஆசிரியர், யாழ். முத்துதம்பி மகா வித்தியாலயம்), ரேணுகா (சுவிற்சலாந்து), கமலவேணி ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதுறிகா, துமிலன், வக்ஷலன், கேசவி, ஆரபி, ரங்கீத், விகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 30.05.2012 இன்று புதன்கிழமை பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: க. பேரம்பலம் (கணவர்)

(8521)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.